வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.09.2023 சனிக்கிழமை | இதழ் : 273 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# கொக்குத்தொடுவாய் புதைகுழியில் மேலும் இரு மனித எச்சங்கள் மீட்பு!

- பெண் போராளிகளுடையவை என சந்தேகம்!
- துப்பாக்கித் தோட்டாக்களும் மீட்பு



முல்லைத்தீவு, செப்ரெம்பர் 09

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் நேற்றைய தினம் இரு மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இந்த இரு மனித எச் சங்களில் இருந்த உடைகளை அடிப்படையாகக் கொண்டு அவை பெண் போராளிகளுடையவை என்று கருதப்படுகின்றது. உள்ளாடை மற்றும் பச்சை நிற நீளக்காற்சட்டையில் இலக்க மிடப்பட்டிருந்தன. அத்துடன், துப்பாக்கி தோட்டாக்களும் இருந் தமை அவதானிக்கப்பட்டுள்ளது.**

கொக்குத் தொடுவாயில் மனித புதைகுழி அகழ்வு பணிகள் மீண்டும் புதன்கிழமை ஆரம்பமாகி நேற்று வெள்ளிக்கிழமையும் அகழ்வு பணிகள் தொடர்ந்தன. முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபன் முன்னிலையில்

இது தொடர்பாக, அகழ்வு பணியில் பங்கேற்றிருந்த சட்டத்தரணிகளுள் ஒருவரான கே. எஸ். நிரஞ்சன் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஏற்கனவே இனங்காணப்பட்ட மனித மனித எச்சங்களில், இரண்டு மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் இரண்டும், விடு தலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகளுடையவையாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

அத்தோடு அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட ஆடைகளில் இலக்கங்களில் இடப்பட்டுள்ளன.

அதற்கமைய

11

## சுகாதார அமைச்சர் கெஹலிய மீதான நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி!

கொழும்பு, செப். 09

சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை அரசாங்கத்தால் 40 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக 73 வாக்குகளும் எதிராக 113 வாக்குகளும் கிடைத்தன. இதன் மூலம் 40 மேலதிக வாக்குகளினால் அரசால்

11

## அடுத்த ‘அறகலய’ உருவானால் இரத்த வெள்ளமாக இருக்கும்!

### சந்திரிகா குமாரதுங்க



கொழும்பு, செப். 09

“அடுத்த ‘அறகலய’ நிம்மதியாக இருக்காது. அது இரத்த வெள்ளமாக இருக்கும். மக்களின் கோபத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்.” - இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சப்பாத்தாக நான் இருந்திருந்தால்கூட பொதுத்

11



பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவின் சூர்யோற்சவ தினமான நேற்றுக் காலை சுவாமி வீதியுலா வந்தபோது...

## போதைப்பொருள் விற்பனை; பெண் உட்பட நால்வர் கைது!

யாழ்ப்பாணம், செப். 09

யாழ்ப்பாணத்தில் மாணவர்களை போதைக்கு அடிமையாக்கும் கும்பலை சேர்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் தனியார் மருத்துவமனையில் பணியாற்றும் பெண் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதின்ம வயதினரை போதைக்கு அடிமையாக்கி, அவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்து வரும் கும்பல் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில், தனியார் மருத்துவமனையில் பணியாற்றும் பெண் ஒருவர் உட் பட நால்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நால்வரும் போதைப்

11

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## சர்வதேச விசாரணைக்கு அரசு தயார் ஒரு தரப்பினரே சாதகமாக இல்லை!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, செப். 09

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க தயார் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளபோதும் ஒரு தரப்பினர் அதற்கு சாதகமான நிலைப்பாட்டை தெரிவிக்கவில்லை. குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் ஆளும் எதிர் தரப்பினர் முரண்பட்டு கொண்டால் ஒருபோதும் உண்மையை கண்டுபிடிக்க முடியாது. ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என நீதி சிறைச்சாலைகள்

11

## போலி சான்றிதழை வழங்கி ஆசிரியர் பணி பெற்றவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 09

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போலியான பெறுபேற்று சான்றிதழை சமர்ப்பித்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் சேவையில் பணியாற்றிய நபரை யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அவருக்கு போலி பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழை தயாரித்து வழங்கியவரும் கைது

11

## மனிதப்புதைகுழி அகழ்விடத்தில் செய்தியாளர்களுக்கு இடையூறு

முல்லைத்தீவு, செப். 09

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பாக செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களுக்கு பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழியை மீண்டும் அகழும் பணிகள் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. நேற்றும் தொடர்ந்தது.

இந்த நிலையில், மனிதப்புதைகுழி அகழ்வு இடத்திலிருந்து வீதிப் பகுதிக்கு செல்லுமாறும் - அங்கிருந்தே செய்திகளை சேகரிக்குமாறும் ஊடகவியலாளர்களிடம் பொலிஸார் கூறினர்.

அகழ்விடத்தில் இருந்து வீதி தூரத்தில்

11

## இப்படியும் நடக்கிறது

அவர் முதல் தடவையாக விமானத்தில் பயணம் செய்வதற்காக விமானத்தில் ஏறியிருந்தார். அவருக்கு மகிழ்ச்சி எல்லை கடந்திருந்தது.

விமானத்தில் ஏறியதும் தனக்கு பிடித்தமான ஓர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார். விமானப் பணிப்பெண் வந்து அவருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைக் காட்டி அதில் அமருமாறு கேட்டார்.

ஆனால், அவரோ எவ்வளவு சொல்லியும் தகராறு பண்ணிக்கொண்டே இருந்தார்.

விமானம் கேரளாவின் கொச்சி விமான நிலையத்திலிருந்து புதுடில்லிக்கு செல்லவிருந்தது.

விமானப் பணிப்பெண் வேறு வழியில்லாமல் விடயத்தை அந்த விமானத்தின் விமானியிடம் சென்று முறையிட்டார்.

விமானி நேராக அந்த பயணியிடம் வந்து நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்று கேட்க, அவர் சொன்னார் “டில்லிக்கு” என்று.

உடனே அந்த விமானி, “இந்த ஆசனம் சென்னைக்கு போகின்றது. டில்லிக்கு போவதெனில் அந்த ஆசனத்தில்தான் (அவருக்கு ஒதுக்கப்பட்டதைக் காட்டி) போகவேண்டும்” என்றார்.

உடனே அந்த பயணி ஓடிச் சென்று அந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

சிலர் கதைக்கின்ற சில விடயங்களைக் கேட்கின்றபோது இந்தக் கதையும் அந்த பயணியும்தான் ஞாபகத்துக்கு வருகின்றனர்.

இப்போது யாரை சந்தித்தாலும் அவர்கள் முதலில் பேசத் தொடங்குவது இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சனல் – 4 வெளியிட்ட ஆவணப் படம் பற்றியதுதான்.

அதில், முக்கிய பாத்திரத்தில் பங்குகொண்டவர் பிள்ளையானின் நெருங்கிய சகாவாக இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அவருடன் இருந்த அசாத் மௌலானாதான். அவர் பிள்ளையான் பற்றி பல விடயங்களைக் கூறியிருந்தாலும் அவை ஒன்றும் நமக்கு புதிய விடயங்கள் அல்ல. பிள்ளையான் பற்றி ஏற்கனவே அறிந்த விடயங்கள்தான்.

பிள்ளையான் ஓர் அப்பாவி என்றோ அல்லது கறைபடியாத உத்தமர் என்றோ யாரும் இங்கே வாதிடப்போவதில்லை. ஆனால், அவர் செய்தவை என்று பட்டியலிடப்பட்ட அத்தனை சம்பவங்களிலும் பங்குகொண்டவர் இந்த அசாத் மௌலானா. அவரை இப்போது சிலர் ‘கொண்டாடுகின்ற’போதுதான் உறுத்தல் ஏற்படுகின்றது.

அந்த காணொலியை பார்த்த ஒரு முன்னாள் போராளி கேட்டார், “இத்தனை பெரிய வேலையைச் செய்வதற்கு திட்டமிடுகின்றவர்கள் அசாத் மௌலானா போன்ற ஒருவரை பயன்படுத்துகின்ற அளவுக்கு முட்டாள்களாக இருப்பார்களா?” என்று. அதைவிட அவ்வாறு இலங்கையின் இராணுவ புலனாய்வு பணிப்பாளர் அதற்கு திட்டமிட்டிருந்தால் புத்தளத்திலுள்ள சஹ்ரானின் இடத்துக்கு சென்று சந்தித்தார் என்பதை நம்பிக்கொண்டு அந்தக் காணொலி பற்றி பேசுவதும் நகைப்புக்கு இடமானது என்கிறார்.

நாம் இங்கே இப்படி எழுதுவதால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் யாரும் சம்பந்தப்படவில்லை என்றோ அல்லது தேர்தல் வெற்றிக்காக இப்படியெல்லாம் செய்ய மாட்டார்கள் என்றோ அல்ல.

இந்தக் காணொலியில் சொல்லப்படுகின்ற விடயங்கள் உண்மையானவையா என்ற சந்தேகத்தையே இங்கே கிளப்ப வேண்டியிருக்கின்றது.

அதுபற்றிய சந்தேகங்களுக்கு அப்பால் இன்று இந்தப் பத்தியில் நாம் சொல்ல வருவது,

இந்தக் காணொலி வெளிவந்த பின்னர் பலரும் குறிப்பாக இன்றைய எதிர்க்கட்சியில் இருக்கும் பலரும் அதுபற்றி குரல் எழுப்பி வருகின்றனர்.

அவர்களில் பலர் தாக்குதல் நடந்ததும் சஹ்ரான் இலங்கை இராணுவத்திடம் சம்பளம் பெற்றாரென தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தவர்கள்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் தமக்கு தகவல் வழங்குகின்றவர்கள் பலர் தமது கொடுப்பனவு பட்டியலில் இருந்தார்கள் என்றும் அதுபற்றிய விவரங்களை வெளியிடுவது தேசிய பாதுகாப்புக்குப் பாதகமானது என்றும் பாதுகாப்பு தரப்பில் விளக்கமளிக்கப்பட்டு வந்தது.

சஹ்ரானுக்கு இலங்கை இராணுவ உளவுத்துறையினர் சம்பளம் கொடுத்து வளர்த்து வந்தனர் என்று குற்றஞ்சாட்டியவர்கள்தான், இப்போது சனல் 4இன் ஆவணப்படத்தை காட்டி முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என்கின்றனர்.

ஆக, இராணுவத்தின் உளவுப்பிரிவின் சம்பளப் பட்டியலில் இருந்த ஒருவரை பிள்ளையானின் உதவியாளர் அசாத் மௌலானா உளவுத்துறையின் இயக்குநருக்கு அறிமுகம் செய்து வைத்ததாகக் கூறுவதை எதற்காக தூக்கிப்பிடிக்கின்றனர் என்பது தெரியவில்லை.

அவர் சொல்வது சரி எனில், இவர்கள் முதலில் சொன்னது பிழையா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# 4,000 கிராம உத்தியோகத்தர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள்!

## உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

*கொழும்பு, செப். 09*

வெற்றிடமாக உள்ள சுமார் 4 ஆயிரம் கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு விரைவில் ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஆராய பிரதமரின் செயலாளர் அநுர திஸநாயக்க தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள 14 ஆயிரத்து 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் டிஜிற்றல் மயமாக்கும் e-GN திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த இதனைத் தெரிவித்தார்.

மேலும், “நாளை தொடர்பில் நம்பிக்கை இல்லாததொரு நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டை பொறுப்பேற்றார். குறிப்பாக, மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டுக் கொண்டு வருவதே எமக்கு வழங்கப்பட்ட பிரதான பணியாக இருந்தது.

ஆனாலும் ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் எடுத்த தொலைநோக்குத் தீர்மானங்களால் ஒரு வருட குறுகிய காலத்தில் நாட்டிலும், கிராமிய மட்டத்திலும் வறுமையை போக்கி, பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த முடிந்துள்ளது.

கிராம அளவில் பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கும் கட்டமைப்பான கிராம உத்தியோகத்தர் பதவிகளில் அதிகளவில் வெற்றிடங்கள் நிலவுகின்ற காரணத்தால், மக்களுக்கான நலன்புரி சேவைகள் உட்பட பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. குறிப்பிட்ட மாவட்டங்கள், பிரதேசங்கள் மற்றும் நிறுவனங்களில் வெற்றிடங்கள் காணப்படலாம். இதே நேரம் இன்னும் சில பிரதேசங்களில் மேலதிகமாக உத்தியோகத்தர்கள் இருக்கலாம்.

எனவே தரவரிசையைப் பொருட்படுத்தாமல் அரச சேவை சமநிலைப்படுத்தப்பட வேண்டும். இப்போது அரசாங்கம், அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதைக் கொள்கை ரீதியில் இடைநிறுத்தி இருந்தாலும், தற்போது வெற்றிடமாக உள்ள சுமார் நான்காயிரம் கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், தற்போது, e-GN வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது நிர்வாக நடவடிக்கைகளின்போது மக்கள் தமக்கு அவசியமான ஆவணங்களை இணைய வழியில் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வேலைத்திட்டமாகும்.

நாடு முழுவதும் இந்த நவீன தொழிநுட்ப பொறிமுறையை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏழு மாவட்டங்களில் தற்போது செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக களுத்துறை மாவட்டத்தில் 90 சதவீதமும் புத்தளம் மாவட்டத்தில் 50சதவீதமும் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இதன்படி, எதிர்வரும் காலங்களில், நாடு முழுவதிலும் உள்ள 14 ஆயிரத்து 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் டிஜிட்டல் மயமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.” என்றார்.

(ஐ)

# யாழ். நகரத்தில் இரு மாதங்களில் 13 மோட்டார் சைக்கிள்கள் திருட்டு!

*யாழ்ப்பாணம், செப். 09*

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கடந்த இரண்டு மாதகால பகுதியில் 13 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்திய சாலை, மத்திய பேருந்து நிலையத்துக்கு அண்மையாக நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு திருடப்பட்டன.

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்களால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள்களை திருடுவோர் ஒரு வலையமைப்பாக செயல்படுகின்றனர் என்றும், மோட்டார் சைக்கிள்களின் உதிரிபாகங்களை கழற்றி விற்பனை செய்யப்படுவதால் அவர்களை கைது செய்வது சிக்கலாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை யாழ். நகரின் மத்தியில் உள்ள வங்கி ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை ஒருவர் திருடிச் சென்றமை சி. சி. ரீ. வி. கமெராவில் பதிவாகியுள்ளது. இந்தக் காணொலியை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# வாள்களுடன் நடமாடியவர் நெல்லியடியில் கைதானார்

*வடமராட்சி, செப். 09*

நெல்லியடி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் வாள்களுடன் நடமாடிய ஒருவர் சிறப்பு அதிரடிபடையினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் அதே இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 3 கிராம் 80 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 3 வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சந்தேக நபர் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

# வாகன இலக்க தகடுகளை பெற்றுக்கொள்ள அறிவித்தல்!

*யாழ்ப்பாணம், செப். 09*

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தலைமை பணிமனையிலிருந்து வடக்கு பணிமனைக்கு வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் கிடைத்துள்ளதாக உதவி ஆணையாளர் ஆர். சிவகரன் அறிவித்துள்ளார்.

வாகன இலக்கத் தகடுகளின் பட்டியலை யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்தின் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்கள் பார்வைக் காக வைக்கப்பட்டுள்ளது. இதனை மாவட்ட செயலகத்தின் இணையத் தளத்திலும் பார்வையிட முடியும்.

புதிதாக வாகனங்களை பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவு புத்தகம், தேசிய அடையாள அட்டையையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் இந்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (ஸ்ரிக்கர்) என்பவற்றையும் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu
09.09.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முஸ்லிம் எதிர்ப்பு வெளிக்கிளம்புமா?

சனல் - 4 தொலைக்காட்சியின் - ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான காணொலி பல்வேறு மட்டங்களில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ராஜபக்ஷக்கள் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஒரு சதியாகவே இவ்வாறானதொரு கொலை நாடகத்தை அரங்கேற்றியிருக்கின்றனர் - என்னும் பார்வையை இந்தக் காணொலி ஏற்படுத்தியிருக்கின்றது.

இதனை கோட்டாபய ராஜபக்ஷ மறுத்திருக்கின்றார். ராஜபக்ஷ தரப்பைப் பொறுத்தவரையில் இது தங்களுக்கு எதிரான ஒரு சதி. தங்கள்மீது பாரதூரமான பழியொன்றை சுமத்தி தங்கள் அரசியல் வாழ்வுமீது நிரந்தரமான கறையை ஏற்படுத்துவதுதான் இதற்கு பின்னாலுள்ள நோக்கம். எதிர்கட்சிகளை பொறுத்தவரையில் தங்கள் அரசியல் எதிரிகளை கிழித்துத் தொங்கவிடுவதற்கு கிடைத்திருக்கும் அருமையானதொரு வாய்ப்பு. அதனை அவர்கள் பயன்படுத்த முயற்சிப்பது அரசியலில் ஆச்சரியமானதல்ல.

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றபோது ரணில் - மைத்திரி அரசாங்கத்தை கிழித்துத் தொங்கவிடுவதற்கான ஒரு துருப்புச்சீட்டாக ராஜபக்ஷக்கள் அதனை பயன்படுத்திக் கொண்டனர். நாடு மிகப்பெரும் பாதுகாப்பு நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது - அதனை சரி செய்வதற்கு தங்களை ஆதரிக்குமாறு பிரசாரங்களை முன்னெடுத்தனர். எனவே, அரசியலை பொறுத்தவரையில் வாய்ப்புகள் கிடைத்தால் ஒவ்வொருவரும் அதனை பயன்படுத்திக் கொள்ளவே முயற்சிப்பர். இது தேர்தல் அரசியலில் மிகவும் சாதாரணமானது. ஆனால், தேர்தலில் வெற்றி பெற்றதும் விசாரணைக் கதைகள் முடிந்துவிடும். மக்களும் சிறிது காலத்தில் அனைத்தையும் மறந்துவிடுவர்.

ஆனால், சனல் - 4 காணொலி பிறிதொரு சிக்கலை ஏற்படுத்தலாம். இந்தக் காணொலி முற்றிலுமாக முஸ்லிம் நபர் ஒருவரின் - அதிலும் இராணுவ புலனாய்வு பிரிவோடு இணைந்து செயல்பட்டா ரென (அவரே ஒப்புக் கொள்கின்றார்) கூறிக்கொள்ளும் ஒரு முஸ்லிம் நபரின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டே நகர்கின்றது.

முஸ்லிம்கள் தொடர்பில் கடும்போக்கு சிங்கள தரப்புகளிடம் ஏற்கனவே பலமான சந்தேகங்கள் காணப்படுகின்றன. இந்த நிலையில் ராஜபக்ஷக்கள்மீது விரல் நீட்டுவதன் மூலம், ராஜபக்ஷக்களை ஆதரித்தவர்கள் அனைவரின் நம்பகத்தன்மையும் அவர்களின் ஈடுபாடும் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது. இந்த நிலைமை முஸ்லிம்கள் நம்பத்தகுந்த தரப்புகள் அல்ல என்னும் பார்வையொன்றை மீண்டும் சிங்கள தேசியவாத தரப்புகள் மத்தியில் தீவிரப்படுத்தலாம். அரசாங்க படைப் பிரிவுகளில் செயல்பட்டுவரும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் சந்தேகம் கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தலாம்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்த சிங்கள தேசியவாத குழுக்கள் மற்றும் பௌத்த பிக்குகள் ஓர் இலக்குக்காகவே அவரை ஆதரித்திருந்தனர். அவரை வெற்றி பெற செய்வதன் ஊடாக தங்களது அரசியல் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யலாம் என்னும் நோக்கிலேயே அவருடன் அணிசேர்ந்தனர். ஆனால், கோட்டாபயவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அது கேள்விக்கு உள்ளாகிவிட்டது. இந்த நிலையில் தற்போது, ஒரு சதி முயற்சி மூலம் இஸ்லாமிய தற்கொலையாளிகளை வைத்து சொந்த மக்களையே கொன்று ஆட்சிக்கு வந்திருப்பதான குற்றச்சாட்டு அவர்களை பெரியளவில் பாதிக்கக்கூடியது.

இவ்வாறானதொரு பெரும் பழிக்கான சான்றாக ஒரு முஸ்லிம் செயல்பட்டிருக்கின்றார் என்று எண்ணும்போது முஸ்லிம் எதிர்ப்பு தென் பகுதியில் தீவிரமடைய வாய்ப்பு உண்டு.

# சுகாதார துறையை மீட்டெடுக்க 50 ஆயிரம் கோடி ரூபாய் தேவை!

## வஜிர அபேவர்த்தன எம். பி.

கொழும்பு, செப். 09

நாட்டின் சுகாதாரத் துறையை இயல்பு நிலைக்கு கொண்டுவர 50 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகின்றது. அந்த பணத்தை தேடிக்கொள்வதாக இருந்தால் இலங்கையை வங்குரோத்து பட்டியலில் இருந்து மீட்டுக்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்நாட்டு அரசு இறை திருத்தச் சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பது, நாட்டை வங்குரோத்து பட்டியலில் இருந்து விரைவாக கழற்றிக் கொள்வதற்காகவேயாகும்.

சுகாதாரத் துறையில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன அந்த வகையில் சுகாதார சேவையை முழுமையாக இயல்பு நிலைக்கு கொண்டு வருவதானால் 50 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

அந்தளவு தொகையை தேடிக்கொள்வதென்றால் இலங்கை வங்குரோத்து பட்டியலில் இருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும். அத்துடன், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு ஒரு சிலர் மட்டும் காரணமல்ல பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள். அதிகாரிகளும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

அந்த வகையில் நான் சரி. அவர் தவறு என ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டு சுகாதாரத்தை அரசியலாக்கிக் கொள்வதால் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. அனைவரும் தவறு செய்துள்ளவர்கள். அந்த வகையில் அனைவருமே ஒன்றிணைந்து அதனை நிவர்த்திக்க வேண்டும்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். அதனையடுத்து எதிர்வரும் 25 ஆம் திகதியளவில் நாட்டை வங்குரோத்து பட்டியலில் இருந்து அகற்றிக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது - என்றார். (ஐ)

# வாழ்வக நிறுவுநர் நினைவுநாளும் நினைவு பேருரையும்

யாழ்ப்பாணம், செப். 09

வாழ்வகம் நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவுநாளும் நினைவுப் பேருரையும் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

வாழ்வகம் நிறுவனத்தின் கௌரவ தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் வாழ்வகம் நிறுவனத்தின் செல்லா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட செயலர் அ.சிவபாசுரந்தரன் பங்கேற்பார். நினைவு பேருரையை யாழ். போதனா மருத்துவமனை போசனையாளர் திருமதி வாசினி ராசதுரை ஆற்றவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக உடுவில் பிரதேச செயலர் த. முகுந்தன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் தில்லையம்பலம் வரதன், இலங்கை மின்சார சபை சுன்னாகம் மின் அத்தியட்சகர் து. சுதாகரன், மட்டக்களப்பு - ஆரையம்பதி கலாசார உத்தியோகத்தர் ஆ. பரமேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். கௌரவ அதிதியாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்துகொள்வார். (ஐ)



இலங்கை - மாலைதீவுக்கான கனடா அரசியல் மற்றும் வர்த்தகத்துக்கான ஆலோசகர் டானியல் வூட் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தை சென்று பார்வையிட்டபோது....!

# சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 09

யாழ். பல்கலைக்கழகம், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் ஆன்மீக நாட்டமுள்ளவர்கள், இந்தியாவின் - சிதம்பர நடராஜர் ஆலயத்தின் வடக்கு மடத்தின் சங்கானை கிளை மடம் இணைந்து நல்லை கந்தன் வருடாந்த திருவிழா கால மோர் விநியோகம் மற்றும் ஆன்மீக சமூக மேம்பாட்டு விழிப்புணர்வு மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

இதில், இன்று சனிக்கிழமை சமூக மேம்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நீதி மன்ற முகாமைத்துவ அலுவலர் நடராஜா அருள்மொழிச்செல்வன், அருளையா யோகநாயகம் ஆகியோர் உரையாற்றுவர் பங்கேற்பார். சமூக வலைத்தளங்களால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் குறித்து யோகராஜா ஷர்மிக் உரையாற்றுவார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு






**மேடம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடியும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று வருந்துவீர்கள். வேலைச் சுமை அதிகமாகும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**சிம்மம்**
உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
சொன்ன சொல்லை காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். நிர்வாகத்திறமை வெளிப்படும். புதிய முயற்சியால் வெற்றி கிட்டும் நாள்.

**துலாம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
இன்று சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்று கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த வேலைகள் முடியும்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும்.

**கும்பம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும்.

**மீனம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும்.

# தி. மு. கவுடன் உடன்படவில்லை! காங்கிரஸ் கட்சி அறிவிப்பு!

புதுடில்லி, செப். 09

'சனாதனம் குறித்த தி. மு. க. அமைச்சர் உதயநிதி, பாராளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா ஆகியோரின் கருத்துகளுடன் உடன்படவில்லை. அனைத்து மதங்களுக்கும் சமமான மதிப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதையே கட்சி நம்புகிறது' என்று காங்கிரஸ் கட்சி குறிப்பிட்டது.

'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் ஒவ்வொரு தனி உறுப்பினரும் அனைத்து நம்பிக்கைகளுக்கும் சமூகங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் அக் கட்சி குறிப்பிட்டது.

சனாதனம் குறித்து அமைச்சர் உதயநிதி, ஆ.ராசா ஆகியோரின் கருத்துகள் மிகப் பெரிய விவாதப் பொருளாக மாறியுள்ள நிலையில், இக் கருத்தை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

'ஒவ்வொரு மதம் மற்றும் நம்பிக்கைகளுக்கு அவற்றுக்குரிய இடம் மற்றும் மதிப்பளிக்க வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சி எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. ஒரு சமூகம் அல்லது நம்பிக்கைக்கு எதிரான கருத்தை அரசமைப்பு சட்டமும் அனுமதிக்கவில்லை, காங்கிரஸ் கட்சிக்கும் அதில் நம்பிக்கையில்லை. காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை அறிந்தவர்கள், இந்த விவகாரத்தில் கட்சியின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவார்கள். இதுதொடர்பாக அரசியலமைப்புச்சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதுதான் காங்கிரஸின் நிலைப்பாடு. இதில் மறுபரிசீலனைக்கு வாய்ப்பே இல்லை' என்றார்.

சனாதனம் குறித்த திமுக தலைவர்களின் கருத்துக்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவிக்காதது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், 'தி. மு. க. தலைவர்களின் கருத்துகளுடன் காங்கிரஸ் கட்சி உடன்பாடு இல்லை. அதே நேரம், இந்த விவகாரம் குறித்து தி. மு. கவிடம் காங்கிரஸ் எழுப்ப வேண்டிய அவசியமில்லை' என்றார்.

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் போராட்டம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது!

சென்னை, செப். 09

விலைவாசி உயர்வு, வேலையின்மை உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில், மத்திய அரசு நிறுவனங்கள் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

விலைவாசி உயர்வு, வேலையின்மை உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் மத்திய அரசு நிறுவனங்கள் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 இடங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 350 பேர் கைது செய்யப்பட்டனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் மத்திய அரசை கண்டித்து சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில், மத்திய அரசை கண்டித்து முழக்கமிட்டனர். மேலும், அக்கட்சியினர் முக்கிய நிர்வாகிகள் மத்திய அரசின் செயல்பாடுகளை கண்டித்து கண்டன உரையாற்றினர். மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 336 பெண்கள் உட்பட 872 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இதே போல், திருவள்ளூர் மாவட்டத்தில் 10 இடங்களில், மத்திய அரசு நிறுவனங்களின் முன்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்ட 900இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்து பின்னர் விடுவித்தனர். (ஐ)

# தமிழ்நாட்டில் ஆன்மீக ஆட்சியே வரவேண்டும்

## அண்ணாமலை தெரிவிப்பு



சென்னை, செப். 09

'தி.மு.க., ஆட்சியில் ஆன்மீகம் முற்றிலும் இல்லை. வருங்காலத்தில் தமிழகத்தில் ஆன்மீக ஆட்சி வர வேண்டும்,'' என, தமிழக பா. ஜ. க, தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் நடைபயணத்தில் ஈடுபட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் கலாசாரம் என்பது இறை கலாசாரம். அனைத்து இறை புத்தகங்களும் ஆன்மிக பாதையில் இருக்கக்கூடியது. சனாதனத்தை வேர் அறுப்போம் என்று சொன்னால், தேவாரம், திருவாசகம், ஐம்பெருங்காப்பியங்கள், திருக்குறள், புறநானூறு உள்ளிட்ட எத்தனை புத்தகங்களை நீங்கள் கொளுத்துவீர்கள்.

ஏனெனில், ஒவ்வொரு புத்தகத்திலும் கடவுள் இருக்கிறார். ஒவ்வொரு காப்பியத்திலும் சனாதன தர்மம் இருக்கிறது. உலகில் உள்ள மற்ற மதங்களை விட, சனாதன தர்மத்துக்கு மட்டும்தான் மனிதன் இறைவனாக முடியும் என்று கூறப்படுகிறது.

இதனால்தான் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்களில் இருந்த ஆழ்வார்கள், நாயன்மார்களை நாம் வணங்குகிறோம். சனாதன தர்மத்தில் எந்தவித சாதி பாகுபாடும் கிடையாது. இந்த பாகுபாட்டை உருக்கியது மனிதர்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய தி.மு.க., ஆட்சியில் ஆன்மிகம் முற்றிலும் இல்லாதது. வருங் காலத்தில் தமிழகத்தில் ஆன்மிகம் மலர்ந்தாக வேண்டும்.

ஆன்மிக ஆட்சி வர வேண்டும். இதனால் யாருக்கும் பாதகமில்லை. ஆன்மிக ஆட்சியில் தான் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் நலமாக இருப்பர்.

தமிழகத்தில் ஒரு விசயத்தை அழிக்க வேண்டும் எனில், முதலில் ஊழலை அழிக்க வேண்டும். மதுபான கடைகளை அழிக்க வேண்டும். இதை தவிர்த்து, சனாதனத்தை அழிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை - என்றார். (ஐ)

# நடிகர் மாரிமுத்து காலமானார்!



சென்னை, செப். 09

நடிகரும், இயக்குநருமான மாரிமுத்து (வயது 57) திடீர் மாரடைப்பு காரணமாக சென்னையில் நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

திரைப்படங்களை காட்டிலும் சின்னத்திரையில் எதிர்நீச்சல் என்ற நெடுந்தொடரில் ஆதி குணசேகரன் என்ற எதிர்மறை பாத்திரத்தில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமான இவர்.

இந்த நெடுந்தொடருக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்தபோது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு, உடனடியாக மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் காலமானார். (ஐ)

# படையிடம் சரணடைந்தவர்களே கொக்குத்தொடுவாயில் புதைப்பு

## துரைராசா ரவிகரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப்.

**கொக்குத்தொடுவாயில் சரணடைந்த பிள்ளைகளையே புதைத்திருக்கிறார்கள் எனவும் பல உடல்கள் இதில் மேலும் தென்படலாம் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வானது ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் அவதானித்த வகையில் பெண்ணின் உடல் உறுதிப்படுத்த் கூடியதாக இருக்கின்றது.

அதே நேரம் சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ கூறியது போல் துப்பாக்கிக் குண்டு உடையில் துளைத்திருப்பதனை காணக்கூடியதாக இருந்தது.

இனிப்பு கடதாசி ஒன்றும் அதில் பகுப்பாய்விற்கு எடுத்து வைக்கப்பட்டிருந்தது. இதனை விட நாங்கள் அவதானித்த வகையில் கண்ணுக்கு கட்டும் துணியைக் கூட காணமுடிந்தது.

ஏற்கனவே நான் கூறியது போல் 2009 ஆம் ஆண்டு இறுதி பகுதியில் சரணடைந்த விடுதலைப் புலிகளை கொண்டுவந்து கண்ணைக் கட்டி துப்பாக்கியால் சுட்டு அல்லது சித்திரவதை செய்து சரணடைந்த பிள்ளைகளை இவ்வாறு புதைத்திருக்கிறார்கள் என்பது நான் அறிந்த வகையில் காணக்கூடியதாக உள்ளது-என்றார். (அ)

# மாணவியின் கை அகற்றப்பட்டமைக்கு உரிய நீதி வழங்கப்படுவது அவசியம்!

## ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, செப். 09

8 வயதான யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவியின் கை அகற்றப்பட்டமைக்கு நீதி விசாரணை வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிகுந்த ஆர்வமும் திறமையுமுள்ள மாணவிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது திட்டமிட்ட செயல் அல்லாவிட்டாலும் மருத்துவத் துறைக்கு இழுக்கான விடயம் என்றும் கை அகற்றப்பட்ட விடயம் அக்குழந்தையின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது என்றும் சங்கம் கூறியுள்ளது.

இது போன்ற தவறுகள் இனியும் நடைபெறக்கூடாது என்பதற்காக முறையான நீதி விசாரணை நடத்தப்பட்டு தவறுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# அதிக பணம் செலவழிக்கும் 10 அமைச்சுகள் மதிப்பாய்வு

கொழும்பு, செப். 09

அதிக பணம் செலவழிக்கும் 10 அமைச்சுகளின் செலவுகளை மதிப்பாய்வு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கை கட்டமைப்பை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான பத்திரமொன்றை இவ்வருட இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு வெளிவிவகார அமைச்சரிடம் கேட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# இசை நிகழ்ச்சியில் மோதல் 5 பேர் வைத்தியசாலையில்!

திருமலை, செப். 09

திருகோணமலை - கோமரங்கடவல பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின்போது இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மோதலில் காயமடைந்த ஐவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் யுவதி ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோமரங்கடவல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாழ்.பல்கலை மாணவர்கள் இருவர் வழிப்பறியில் ஈடுபட்டனரென கைது!

யாழ்ப்பாணம், செப். 09

வழிப்பறி கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தனர் எனும் குற்றச்சாட்டில், யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகச் சூழல் மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் செல்லும் இருவர் வழிப்பறியில் ஈடுபட்டு வருவதாக கடந்த சில நாட்களாகப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையிலேயே இக்கைது இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் போதைக்கு அடிமையானவர்கள் எனவும், போதைப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவே இவ்வாறு வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அந்த மாணவர்களை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அரசி தட்டுப்பாட்டை தொடர்ந்து சோதனை நடவடிக்கைகள் தீவிரம்

கொழும்பு, செப். 09

தற்போது சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான தகவலை கருத்தில் கொண்டு, நுகர்வோர் அதிகார சபை சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது.

அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, கீரி சம்பா ஒரு கிலோகிராம் 260 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோகிராம் 230 ரூபாவுக்கும், நாடு அரிசி ஒரு கிலோகிராம் 220 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும்.

அத்துடன், ஒரு கிலோ சிவப்பு அரிசியை விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு அதிகமான விலையில் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமை தொடர்பில் வழக்கு தொடரப்பட்டால், தனிநபரால் நடத்தப்படும் வர்த்தக நிலையத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் முதல் 5 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு 5 முதல் 50 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் 1977 என்ற அவசர இலக்கத்திற்கு அறிவிக்குமாறு நுகர்வோர் அதிகார சபை பொதுமக்களிடம் கோரியுள்ளது. (அ)

# தோணிக்கல் இரட்டைக் கொலை;
# சந்தேக நபர்கள் மூவருக்கு மன்று பகிரங்க பிடியாணை

வவுனியா, செப். 09

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள் மூவருக்கு வவுனியா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அத்துமீறி வீடொன்றுக்குள் நுழைந்து, ஆணொருவரும் பெண்ணொருவரும் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த கொலைச் சம்பவத்துடன், தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளினால், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தநிலையில், மேலும் மூன்று சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப் பட்டமையினால் அவர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

எனினும் குறித்த 3 சந்தேகநபர்களும், தற்போது தலைமறைவாகியுள்ளதால் அவர்களை கைதுசெய்வதற்கு வவுனியா நீதிமன்றம் நேற்று முன்தினம் பகிரங்க பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுவரும் 6 சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்பை நேற்று முன் தினம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், குறித்த பணிகள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம் சிறைச்சாலையில் வைத்து இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரிடம் இருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்று மீட்கப்பட்டது. (அ)

# இலங்கையின் கையிருப்பு 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சி

கொழும்பு, செப். 09

இலங்கையின் உத்தியோகப்பூர்வ கையிருப்பு கடந்த ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் ஓகஸ்ட் மாதம் 4.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஜூலை மாதம் மூவாயிரத்து 765 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்ட இலங்கையின் கையிருப்பு, ஓகஸ்ட் மாதம் மூவாயிரத்து 598 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. (அ)

# ரணில்-மைத்திரி மீண்டும் கூட்டணி

## பதவி நீக்கத்துக்கு இதுவே காரணம் என்கிறார் தயாசிறி

கொழும்பு, செப். 09

**சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டமையானது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதில் ஏற்படக்கூடிய தடைகளை நீக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் மூலோபாய நடவடிக்கையாகத் தோன்றுவதாக தகவல் வெளியாகியுள்ளது.**

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் யோசனைக்கு தயாசிறி ஜயசேகர எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சுதந்திரக் கட்சி பிறிதொரு தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்காது தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டை தயாசிறி ஜயசேகர கொண்டிருந்



தார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிக்கும் சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாசிறி ஜயசேகரவை கட்சியில் இருந்து நீக்குவதற்கு முக்கிய பங்காற்றியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கமாக மாற்ற நினைத்தவர்கள் தம்மை பதவி நீக்கிய தன் பின்னணியில் இருப்பதாக தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# பொன் விழாவைக் கொண்டாடும் வல்வை மகளிர் மகாவித்தியாலயம்!



யாழ்ப்பானம், செப். 09

யாழ், வடமராட்சி வல்வை மகளிர் மகா வித்தியாலயம் தனது பொன்விழாவைக் கொண்டாடி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக நேற்று காலை மாணவிகளின் சைக்கிள் பவனியும், நடைபவனியும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அயல் பாடசாலைகளான உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி ஆகிய பாடசாலைகள், மாணவிகளுக்கு அமோக வரவேற்பளித்து நீராகரம் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நல்லடக்கம் செய்யப்பட்ட குழந்தையின் உடல் மாயம்!

வவுனியா, செப். 09

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் நீர்த்தொட்டியில் வீழ்ந்து அண்மையில் உயிரிழந்தமையை அடுத்து அடக்கம் செய்யப்பட்ட சிறுமி ஒருவரின் சடலம் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2 வயதான குறித்த சிறுமி கடந்த மாத இறுதியில் உயிரிழந்ததுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சிறுமியின் சடலம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்தநிலையில், அடக்கம் செய்யப்பட்ட இடத்திலிருந்து சடலம் காணாமல்போயுள்ளதாக நெளுக்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்ட இடம் தோண்டப்பட்டுள்ளதுடன் சவப்பெட்டியும் உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் வவுனியா நீதிமன்றில் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் நெளுக்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# ஒரே சட்ட கட்டமைப்பின் கீழ் கல்விக்கொள்கை வரவேண்டும்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

கொழும்பு, செப். 09

நாட்டின் கல்விக் கொள்கைகளை அரசியலுக்கு அடிப்பணியவோ அல்லது அமைச்சர்களின் தேவைக்கேற்ப மாற்றவோ இடமளிக்காது, அதனை ஒரே சட்டக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எப்பாவல பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார சரிவுக்கு பின்னர் இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் இந்த நேரத்தில் நாட்டின் துரித அபிவிருத்திக்



கான புதிய கல்வி முறையொன்று நாட்டுக்கு அவசியம் எனவும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கையின் கல்வி முறையானது உலகிற்கு ஒரு பல்கலைக்கழகமாக அமையும் வகையில் வடிவமைக்க தாம் எதிர்பார்த்திருப்பதாகவும், விரைவான கல்வி சீர்திருத்தங்கள் மூலம் குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் புதிய கல்வி முறைக்கான அவசியம் தோன்றியுள்ளது.

அதற்கமைய அடுத்து வரும் 20 முதல் 30 ஆண்டுகளுக்கு பொருத்தமான வகையில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். புதிய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட விடயங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் பொறுப்பை மைத்திரிபால ஏற்கவேண்டும்!

## இராஜாங்க அமைச்சர் டயனா கமகே



கொழும்பு, செப். 09

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான முழுமையான பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஏற்கவேண்டுமென சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் இந்தியாவும் புலனாய்வு பிரிவினரும் தகவல்களை வழங்கிய போதிலும் பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் எதற்காக விசாரணை நடத்தப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

அத்துடன், குறித்த சந்தர்ப்பத்தில் தமது பொறுப்புக்களை தமக்கு பதிலாக மற்றுமொருவரிடம் கையளிக்காது நாட்டின் ஜனாதிபதி வெளிநாட்டுக்குச் செல்கிறார்.

இதனடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது பொறுப்புக்களில் இருந்து விலகியுள்ளமை தெளிவாகிறது-என்றார். (அ)

# புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் செப். 15 முதல் நாட்டில் அமுல்

கொழும்பு, செப். 09

புதிய ஊழல் தடுப்புச் சட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

21 ஆவது திருத்தச்சட்டத்திற்கு இணங்க புதிய ஊழல் எதிர்ப்பு சட்ட விதிமுறைகளின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் புதிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக பொருத்தமான நபர்களை நியமிக்குமாறு சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும். அரசியலமைப்பு சபையின் அங்கீகாரத்துடன் இலஞ்ச-ஊழல் ஆணைக்குழுவிற்கு புதிய ஆணையாளர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தை ஜனாதிபதி நியமிப்பார்.

மேற்குறிப்பிட்டவர்களின் ஆட்சேர்ப்புக்கான அளவுகோல் அரசியலமைப்பு சபையால் தயாரிக்கப்படும்.

தற்போதுள்ள இலஞ்ச-ஊழல் ஆணைக்குழுவினால் ஏதேனும் பிழையான தீர்மானங்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது மீளப்பெறப்பட்டாலோ விசாரணை செய்வதற்கு புதிய இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலஞ்ச-ஊழல் ஆணைக்குழு 29 வருடங்களாக செயற்பட்டபோதிலும் இலஞ்சம் மற்றும் ஊழல் நாட்டில் ஒழிந்துவிடவில்லை. எனவே அரசாங்கம் புதிய ஊழல் எதிர்ப்பு சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள இலஞ்ச-ஊழல் சட்டமானது பொதுத்துறை மற்றும் அரசியல் பிரமுகர்களுக்கு மட்டுமே பொருந்தும். ஆனால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய விதிமுறைகள் தனியார் துறையிலும் ஆதிக்கம் செலுத்தும்-என்றார். (அ)

# வெளிப்படைத் தன்மையுடன் செயல்படும் நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்படும்நிலை

## சபையில் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 09

**கொழும்பு பிரதேசத்தில் பாரபட்சமின்றி வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் பல நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்படும் நிலை காணப்படுவதாகவும், இந்த விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற முறையில் ஆராயுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.**

சமகாலத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களை நசுக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும், ஊடகங்கள் சுயக்கட்டுப்பாட்டைப் பேணுவது மிகவும் அவசியம் என்றும், அரசாங்கம் ஊடகங்களை நசுக்குவது சர்வாதிகார இயல்பு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மைத் தன்மை மீண்டும் மீண்டும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. உயர்த்த ஞாயிறு தொடர்பான மீள் விசாரணையை இது தொடர்பான அறிவும் அனுபவமும் உள்ள ஷானி அபேசேகரவிடம் ஒப்ப



டைக்க வேண்டும். 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விசாரிக்கவே மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஆணை வழங்கினர்.

எமது நாட்டில் வெளிப்படையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் பயன்படுத்தி ஜனாதிபதி பதவியைப் பெற்று,அரசாங்கம் அமைத்து, அமைச்சுப் பதவிகளையும் பெற்று இன்று இது பற்றி தவறான கருத்துக்களை வெளியிடுவதில் அர்த்தமில்லை.

எங்களுக்கு உண்மை மட்டுமே வெளிப்பட வேண்டும். சேறுபூசும் அரசியலில் ஈடுபட நாங்கள் தயாராக இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்திய ஷானி அபேசேகர சிறையிலடைக்கப்பட்டதன் மூலம் சில விடயங்கள் பற்றிய உண்மை புலப்படுவதாகவும், இந்த தாக்குதல் தொடர்பான மீள் விசாரணையை கைவிலங்குகள் இல்லாமல்,கழுத்தில் கயிறுகள் பிணைக்கப்படாமல் ஷானி அபேசேகரவிடம் வழங்க வேண்டும்-என்றார்.

(அ)

# மருந்து ஒவ்வாமையால் உயிரிழந்தோருக்கு இதுவரையில் மரண சான்றிதழ்கள் இல்லை!

கொழும்பு, செப். 09

அண்மைய தினங்களில் மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்தவர்களுக்கு இதுவரை மரண சான்றிதழ்கள் கிடைக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த நபர்களின் குடும்பங்களுக்கு ஆறு மாதங்களில் இறப்பு சான்றிதழ் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த மக்களுக்கு தற்காலிக இறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மரணத்திற்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை

இதன் காரணமாக சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தில் இந்த விடயங்களை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# ஒருவர் வெட்டிக் கொலை!

கொழும்பு, செப். 09

வெள்ளவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கங்பங்குவ பகுதியில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றுக்குள் வெட்டுக் காயங்களுடன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வழங்கப்பட்ட தகவலுக்கமைய சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

33 வயதான ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் தனது தாய் மற்றும் சகோதரிகளுடன் வசித்து வந்த நிலையில், வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர் மதுபோதைக்கு அடிமையான ஒருவர் எனவும் அயல் வீட்டாருடன் மோதலில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இந்தக் கொலை தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

(அ)

# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளுக்கு தேவன் தண்டனை கொடுக்கின்றார்

## கூறுகிறார் குமார வெல்கம

கொழும்பு, செப். 09

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் தேவன் துடைத்தெறிந்து விடுவார் எனவும் தேவன் தண்டனை வழங்க ஆரம்பித்துள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சனல் 4 தொலைக்காட்சி பற்றி கூறுவதற்கு எதுவுமில்லை. எனினும் தேவன் மேலே இருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றார் என்பதை மறந்து விட வேண்டாம்.

தேவன் தண்டனை வழங்க ஆரம்பித்துள்ளார். கோட்டாபயவுக்கு நாட்டை விட்டு வெளியேற நேரிட்டது.

மற்றுமொருவர் பிச்சை எடுக்க தயாராகி வருகின்றார். இவர்கள் அனைவருக்கும் தண்டனை கிடைக்கும்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் தேவன் துடைத்தெறிவார் என்று நான் கூறுகிறேன்-என்றார்.

(அ)

# பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் உத்திக பிரேமரத்ன

கொழும்பு, செப். 09

தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தாம் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

நாட்டின் மாற்றத்திற்காக 2020 ஆம் ஆண்டு தாம் முதன் முறையாக பாராளுமன்றத்திற்கு பிரவேசித்ததாகவும், ஆனால், இன்று வரை சமூகத்திலோ, பாராளுமன்றத்திலோ முறையான மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனும் இலக்கை தன்னகத்தே கொண்டுள்ளதாகவும், இதற்கு தாமே தலைமை தாங்குவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, நாட்டை மாற்றும் பயணத்தை இன்றிலிருந்து தனியாக ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்த உத்திக பிரேமரத்ன, குறுகிய அரசியல் நலன்கள் அற்ற உண்மையான நல்ல பிரஜைகளை தம்முடன் இணையுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

உத்திக பிரேமரத்ன கடந்த பொதுத் தேர்தலில் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து அனுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# காங்கேசன்துறையில் இரும்பு திருட்டில் ஈடுபட்ட 6 பேர் கைது!

யாழ்ப்பாணம், செப். 09

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைப் பகுதிகளில் இரும்புத் திருட்டில் ஈடுபட்ட 6 பேரைக் காங்கேசன்துறைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நல்லிணக்கபுரம் மற்றும் தையிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள பகுதிகள் கடந்த 30 வருட காலத்திற்கு மேலாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட நிலையில் கடந்த ஜூலை மாதம் முதல் இராணுவத்தினர் அப்பிரதேசத்தில் இருந்து வெளியேறியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

எனினும் அக்காணிகள் இதுவரை காணி உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை எனவும், இதனால் அப்பிரதேசத்திற்குள் காணி உரிமையாளர் செல்ல முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் அப்பகுதிகளுக்குள் சென்று வீட்டின் ஜன்னல்கள், கதவுகள் உள்ளிட்டவற்றை திருடி செல்வதுடன், வீடுகளில் காணப்படும் இரும்புகளையும் உடைத்துத் திருடி செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# வடமாகாண சுகாதாரத்துறையில் பல்வேறு தரப்பினரும் அதிருப்தி!

## சிறுமிக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் நீதியான விசாரணை தேவை என்கிறது ஈ.பி.டி.பி

யாழ்ப்பாணம், செப். 09

வடக்கு சுகாதாரத் துறை திருப்திகரமாக இல்லை என பல்வேறுபட்ட தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன் வைப்பதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை கவலை தரும் விடயம்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளில் இது போன்ற பல சம்பவங்கள் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றது.

சிறுமியின் அகற்றப்பட்டமைக்கு குறித்த விடுதியில் கடமையில் இருந்த தாதியர்கள் தான் காரணம் என பரவலாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாது சிறுமிக்கு ஏற்றப்பட்ட ஊசி மருந்து காலாவதியான மருந்தா என்ற சந்தேகங்கள் எழுகின்ற நிலையில் உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எமது கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சுகாதார அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆகவே, வடமாகாண சுகாதாரத் துறை திருப்திகரமாக இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் நிலையில் சிறுமிக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்கள் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்-என்றார்.

(அ-2)

# திருக்கோவில் பிரதேசத்துக்கு அம்பாறை அரச அதிபர் விஜயம்!

## 75 பேருக்கு காணி உறுதி

அம்பாறை, செப். 09

**அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.**

**திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் அரச அதிபரை வரவேற்றார். அத்துடன் பல கோடி ரூபாய் பெறுமதியான வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.**



இவ் விஜயத்தின்போது திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவில் வாழும் 75 பேருக்கு காணி அளிப்பு பத்திரம் வழங்கப்பட்டது.

சமூர்த்தி பயனாளிகளுக்கு ஒருவருக்கு 10லட்சம் ரூபாய் வீதம் 10பேருக்கு 10மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது.

மேலும் சமூர்த்தி திணைக்களத்தினால் சமூர்த்தி பயனாளிகுடும்பங்களைசேர்ந்த 343 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டது.

நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் கீழ் உலர்மிளகாய் உற்பத்தி செய்வதற்காக தங்க வேலாயுதபுரம் கிராமத்தை சேர்ந்த 05 பயனாளிகளுக்கு நீர் பம்பிகள் வழங்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு சிறுவர் விளையாட்டு கழகங்களுக்கு 1 லட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

விநாயகபுரம் பகுதியில் நன்னீர் மீன்வளப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏழு தடாகங்களின் மீன்பிடி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் எதிர்கால நடவடிக்கை பற்றியும் ஆராயப்பட்டது.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள சமூர்த்திவங்கிகள் பார்வையிடப்பட்டது.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் காரியாலயங்களையும் மேர்பார்வை செய்தார். (அ)



# ஒட்டமாவடியில் விபத்து; 12 வயது மகள் மரணம்!

## தந்தை படுகாயம்

ஓட்டமாவடி, செப். 09

ஓட்டமாவடியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் மரணமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பாலத்துக்கு அருகில் வைத்து இடம்பெற்றுள்ளது.

காவத்தமுனை பனிச்சையடி வீதியைச் சேர்ந்த 35 வயதுடைய அப்துல் கபூர் முகம்மட் கலீல் என்பவர் தனது 12 வயதுடைய மகளை மோட்டார் சைக்கிளில் மாவடிவெம்பு நோக்கி ஏற்றிச் செல்லும் போதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவை பகுதியில் இருந்து வந்த பஸ் வண்டி தந்தை, மகள் பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதியதில் மகள் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்த சிறுமி காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் பாத்திமா றியா எனும் மாணவியாவார்.

இந்த விபத்துச் சம்பவத்தில், படுகாயமடைந்த தந்தை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சொற்பொழிவாளர் ஒன்றியம் கிழக்கில் புதிதாக உதயம்



காரைதீவு, செப். 09

கிழக்கு மாகாணத்தில் புதிதாக சொற்பொழிவாளர் ஒன்றியம் ஒன்று உதயமாகி உள்ளது.

சைவத்தமிழர்களின் விஞ்ஞான மெய்ஞான தொடர்புகளையும் ஆலயங்கள், அறநெறிப்பாடசாலைகள், சமய நிகழ்வுகளில் போதித்து சமூகத்தை நன்னெறிப் படுத்தும் நோக்கில் இவ் அமைப்பு உருவாக்க பட்டுள்ளது.

கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியம் என்ற பெயரில் உதயமாகி உள்ளது.

நிர்வாக கட்டமைப்பை உருவாக்கும் கூட்டம் கல்முனை தரவை சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்றது.

இதன்போது ஒன்றியத்தின் தலைவராக :
சிவஸ்ரீ க.வி.பிரமீன் சர்மா,
பொதுச்செயலாளராக :
தினேஸ்குமார்,
பொருளாளராக : மோகன்,
அம்பாறை மாவட்ட உப தலைவராக : லக்குணம்,
உப செயலாளராக : தமிழகரன் சனாதனன்,
இணைப்பாளராக : பிரதீபன்
ஆகியோரும் சபையினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நிர்வாக கட்டமைப்பை கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதுடன் இந்த நல்ல செயலை ஆரம்பிக்கும் முகமாக ஆலய வளாகத்தில் ஒன்றியத்தினால் மரக்கன்றும் நடுகை செய்யப்பட்டது. (அ)

# தந்தை செல்வா நற்பணி மன்றம் கிழக்கில் அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பு, செப். 09

கிழக்கு மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் அங்குரார்ப்பண கூட்டம் எஸ். கே. தளையரட்ணம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு ஏறாவூர் தமிழ் வித்தியாலய அதிபர் விஷேட அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்கு திருகோணமலை, மட்டக்களப்பு, கல்குடா, பொத்துவில், பட்டிருப்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து மக்கள் கலந்துகொண்டனர்.

மூன்று மாத காலத்துக்கு தற்காலிகமாக நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளது.



தலைவர் : டி. ராஜ்குமார்
உப தலைவர் : டி. கிருத்திகா
மோ. ஜெயலெட்சுமி,
தே. தேவி
பொதுச்செயலாளர் :
எஸ்.கே. தளையரட்ணம்
நிர்வாக செயலாளர் :
திருமதி. ச. தாட்சாயினி
இணைச் செயலாளர் :
திருமதி கே. சந்திரா
திருமதி டி. பவித்ரா
பிரதி தலைவர்கள் :
இ. கிசாந்
செ. ஜெகதலநாதன்
பொருளாளர் :
திருமதி. சி. சண்முகப்பிரியா
கணக்கு பரிசோதகர் :
திருமதி சி. மேகலா
காப்பாளராக:
இராசமாணிக்கம் சாணக்கியன்,
திருமதி சுதாகரி
ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# மோட்டார் சைக்கிள் மீட்பு; திருடியவர் தப்பியோட்டம்

மட்டக்களப்பு, செப். 09

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் உள்ள ஆரையம்பதி பிரதேசத்தில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடிச் சென்ற சந்தேக நபர் தப்பி ஓடியுள்ள நிலையில் அவரால் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரையம்பதி செல்வாநகரில் உள்ள வீட்டின் முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை சந்தேக நபர் ஒருவர் வீட்டின் மதிலினால் ஏறி உள்ளே நுழைந்து திருடிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சந்தேக நபரை காத்தான்குடி பொலிஸார் தேடியபோது அவர் திருடிய சைக்கிளை வீதியில் கைவிட்டு தப்பியோடி உள்ளார்.

அவரால் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரை தேடி மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வாக்னர் கூலிப்படை பயங்கரவாத இயக்கம்

## அறிவிப்பை வெளியிடவுள்ள பிரிட்டன்

லண்டன், செப். 09

**ரஷ்யாவைச் சேர்ந்த வாக்னர் கூலிப்படையைத் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கவுள்ளதாக பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.**




உக்ரைன், சிரியா, மாலி போன்ற நாடுகளில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வாக்னர் கூலிப்படை மீது கொடூர கொலைகள், கைதிகளை சித்திரவதை செய்தல், சூறையாடுதல் போன்ற பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் மறைமுக கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படும் வாக்னர்கூலிப்படையினால் உலக அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ள பிரித்தானியாவின் உட்துறை அமைச்சர் சுயெல்லா பிரேவர்மேன், அதனை தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம், புடினுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட வாக்னர் கூலிப்படையின் தலைவர் பிரிகோஷின் அண்மையில் விமான விபத்தில் உயிரிழந்துவிட்டார் என ரஷ்ய அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# சூடானில் தமது இருப்பிடங்களை இழந்த 50 இலட்சம் பொது மக்கள்!

கார்ட்டூம், செப். 09

சூடானில் இடம் பெற்றுவரும் உள்நாட்டு மோதல் காரணமாக இதுவரை 50 லட்சம் பேர் தங்களது இருப்பிடங்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம் பெயர்ந்தவர்களில் 40 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டிலேயே ஏதிலிகளாக காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 7.5 லட்சம் பேர் சர்வதேச ஏதிலிகளாக காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் எகிப்து, சாட் போன்ற நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

சூடான் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் இதுவரை வெற்றி பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# கனேடிய தேர்தல்களில் சீனாவின் தலையீடா?

## விசாரணையை ஆரம்பித்தது கனடா




ஒட்டாவா, செப். 09

சீனா மற்றும் ரஷ்யாவின் தேர்தல் தலையீடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து கனடா விசாரணையை ஆரம்பித்துள்ளது.

2019 மற்றும் 2021 கனேடிய தேர்தல்களில் சீனா தலையிட முயன்றதாக ஊடக அறிக்கைகள் வெளிவந்ததை அடுத்து, கடந்த பல மாதங்களாக ட்ரூடோவின் அரசாங்கம் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டது.

கன்சர்வேடிவ் கட்சியின் மைக்கல் சோங் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக பீஜிங் மிரட்டல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டிய மற்றொரு அறிக்கையும் வெளியானது.

இந்த சம்பவம் தொடர்பான பரவலான கண்டனத்தை அடுத்து இந்த ஆண்டின் தொடக்கத்தில் டொரண்டோவில் உள்ள சீன தூதர் ஒருவர் வெளியேற்றப்பட்டார்.

இருப்பினும் கனடாவின் உள்விவகாரங்களில் தலையிடவில்லை என தொடர்ந்து மறுத்துள்ள சீனா, குற்றச்சாட்டுகளை ஆதாரமற்றவை என்றும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் கியூபெக் நீதிபதி தலைமையில், வெளிநாட்டுத் தலையீடுகள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுதந்திரமான பொது விசாரணைக்கு கனடா அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அனைத்து எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் பொது விசாரணையை நடத்துவதற்கு கியூபெக் நீதிபதியை அரசாங்கம் நியமிப்பதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் கூறினார்.

(அ)

# வடகொரியா தயாரித்துள்ள அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்








பியொங்யாங், செப். 09

வடகொரியாவினால் தயாரிக்கப்பட்டுள்ள அணுவாயுதங்களை கொண்ட நீர் மூழ்கிக் கப்பல் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

வடகொரியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் குறித்த நீர் மூழ்கிக் கப்பல் வெளிப்படுத்தப்பட்டதாக அந்த நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

வட கொரியா உருவாக்குவதற்கு விரும்பும் ஆயுதங்களின் பட்டியலில் நீண்டகாலமாக அணுசக்தி தாக்குதல் திறன் கொண்ட நீர் மூழ்கி கப்பலும் உள்ளது.

இந்தநிலையில் குறித்த நீர் மூழ்கிக் கப்பலின் படங்களை வடகொரியா நேற்று வெளியிட்டுள்ளது.

எனினும் குறித்த நீர் மூழ்கிக் கப்பல் இதுவரையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# மாலியில் தீவிரவாதிகள் தாக்குதலில் 64 பேர் பலி!

பமாகோ, செப். 09

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியின் வடகிழக்கு பகுதியில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 64 பேர் பலியாகினர்.



குறித்த பகுதியில் பொது மக்கள் பயணித்த படகு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 49 பேர் கொல்லப்பட்டதாக அந்த நாட்டு இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் பயங்ரவாதிகளால் இராணுவ முகாம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் அதில் 15 இராணுவ உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டனர்.

அதேநேரம் மாலி பாதுகாப்பு தரப்பினர் நடத்திய தாக்குத லில் சுமார் 50 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் மாலியில் மூன்று நாட்கள் தேசிய துக்க தினங்களாக பிரகடனப்படுத்தி அந்த நாட்டு அரசாங்கம் அறி வித்துள்ளது. (அ)

# கிராமிய வைத்தியசாலைகளை இப்போது மூடவேண்டிய நிலை!

## சபையில் வீரவன்ஸ எம்.பி. தகவல்

கொழும்பு, செப். 09

**வைத்தியர்கள் மற்றும் தாதியர் வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது ஆதார மற்றும் கிராமிய வைத்தியசாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

**நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 8 வயதுடைய வைசாலி என்ற சிறுமி காய்ச்சல் காரணமாக தனியார் வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்ற போது சிறுமியின் கையில் ஒரு பாகம் அகற்றப்பட்டுள்ளது.

அதற்கான காரணங்ளைப் பெற்றோர் வினாவியபோதும் சரியான பதில் வழங்கப்படவில்லை.

கவனயீனமே இதற்கான காரணமாகவிருந்தால் சுகாதார அமைச்சர் தகுந்த விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

அரச வைத்தியசாலைகளின் பணியாற்றுகின்ற வைத்தியர்கள், தாதியர்களில் 5000 பேர் வரை வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புப் பெறுவதற்கான பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இதனால் ஆதார வைத்தியசாலைகள் உட்பட கிராமிய வைத்தியசாலைகள் மூடுவிழாக் காணவுள்ளதுடன் ஏனையவர்களுக்கு மன உளைச்சல் ஏற்படும் -என்றார்.



இதேவேளை விமல் வீரவன்ஸவின் கருத்துக்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல,

யாழ்ப்பாணத்தில் 8 வயதுச் சிறுமியின் கையின் ஒரு பகுதி அகற்றப்பட்டமை தொடர்பில் விரிவான அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இது மருந்துகளால் ஏற்பட்ட பிரச்னையல்ல. எனவே இவை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்ட பின்னரே சபைக்கு கருத்துக்ளை முன்வைக்க முடியும்-என்றார்.

# வியாங்கொட ரயில் நிலையத்தில் 6 ரயில்கள் நிறுத்திவைக்கப்பட்டன

கொழும்பு, செப். 09

கொழும்பிற்கான பயணத்தை முன்னெடுக்க முடியாமல் 6 ரயில்கள் தற்போது வேயங்கொட ரயில் நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட இரவு நேர தபால் ரயில், கம்பஹா - வேயங்கொடைக்கு இடையில் இயந்திரக்கோளாறுக்குள்ளானமையே இதற்கான காரணமாகும்.

இயந்திரக்கோளா றுக்குள்ளான ரயிலின் எஞ்சினை அப்புறப்படுத்த முடியாமல் உள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் இதிபொலகே தெரிவித்தார்.

ரயில் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, ரயில் எஞ்சினில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறினால் பிரதான மார்க்கத்தில் கம்பஹா - வியாங்கொட இடையில் ஒருவழிப்போக்குவரத்து மாத்திரமே முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் இதிபொலகே தெரிவித்தார். (அ)

# ஆறு நாட்களில் மாத்திரம் இலங்கைக்கு 23ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, செப். 09

இந்த மாதத்தின் முதல் ஆறு நாட்களில் மாத்திரம் 23 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் 6 ஆயிரத்து 188 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து ஆயிரத்து 693 நபர்களும், ஜேர்மனியிலிருந்து ஆயிரத்து 513 பேரும், ரஷ்யாவிலிருந்து ஆயிரத்து 434 பேரும், அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரத்து 127 பேரும் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், சீனாவில் இருந்து ஆயிரத்து 114 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து மேலதிக தகவல் இருந்தால் சி.ஐ.டியினரிடம் சமர்ப்பியுங்கள்

## சாணக்கியனிடம் கோரினார் விஜேதாஸ

கொழும்பு, செப். 09

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் மேலதிக தகவல்கள் இருப்பின் அதனை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான செனல் 4 ஆவணப்படத்தின் தகவலாளரான ஹன்சீர் அஷாத் மௌலானாவின் குரல் பதிவு ஒன்றை பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் நேற்று முன் தினம் பாராளுமன்றில் வெளிப்படுத்தினார்.

பிள்ளையான் என அறியப்படும் சிவனேசதுரை சந்திரக்காந்தன் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டமையின் பின்னணியில் பல விடயங்கள் இருப்பதாக குறித்த குரல் பதிவில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் பதிலளிக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தநிலையில், குறித்த விடயத்தை நிராகரித்து நேற்று பாராளுமன்றில் கருத்துரைத்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் நீதிமன்றம் சிறந்த முறையில் நீதியை நிலைநாட்டியுள்ளது.

பல சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் பல வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய 79 சந்தேகநபர்களுக்கு எதிராக 42 குற்றப்பத்திரங்கள் இதுவரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த செயற்பாடுகள் பாகுபாடின்றி சுயாதீனமான முறையில் நீதிமன்றத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஹன்சீர் அஷாத் மௌலானா என்ற நபர் சனல் 4 தொலைக்காட்சியில் வெளிப்படுத்தாத குரல் பதிவு, பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனிடம் உள்ளதுடன் அவர் அதனை நாடாளுமன்றிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

அப்படியானால் ஹன்சீர் அஷாத் மௌலானா, பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனுக்கு விசேட குரல்பதிவை அனுப்பியுள்ளார்.

இந்தநிலையில், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் நீதி நிலைநாட்டப்பட வேண்டுமாயின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனிடம் உள்ள சாட்சியங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்-என்றார்.

# புலனாய்வு அமைப்புகள் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினரைத் தாக்கி நிறைவேற்று, சட்டமன்ற, நீதித்துறையை அழிக்க அனுமதிக்க முடியாது

## சபையில் கூறினார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, செப். 09

புலனாய்வு அமைப்புகள் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினரை தாக்கி நிறைவேற்று, சட்டமன்ற, நீதித்துறையை அழிக்க அனுமதிக்க முடியாது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதன் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்துகின்றார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவதற்கு மறைமுக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த காலங்களில் செயற்குழுவின் மீது அவநம்பிக்கையை உருவாக்கி, நிர்வாகத்தை விரட்டியடிக்கும் பணியில் ஈடுபட்டனர். தற்போது செயற்குழுவை தாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டமன்றத்தில் உள்ள 225 பேரும் வேண்டாம் என்கிறார்கள். மேலும், நீதித்துறை மீதான நம்பிக்கையை சிதைக்கும் வகையில் சிலர் சில யோசனைகளை உருவாக்கி வருகின்றனர். இது மிகவும் ஆபத்தான நிலை. இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை கண்டறிய வேண்டும்.

மேலும், ஈஸ்டர் ஞாயிறு அன்று நடந்த தீவிரவாத தாக்குதலை எந்த அரசியல் கட்சியோ அல்லது நபரோ அங்கீகரிப்பதாக நான் நினைக்கவில்லை. தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்டவர்களை மறைக்க தற்போதைய ஜனாதிபதி முயற்சிப்பதாக சிலர் குற்றம் சாட்ட முயற்சிக்கின்றனர். பாதுகாப்பு சபைக் கூட்டத்திற்கு கூட தற்போதைய ஜனாதிபதி அழைக்கப்படவில்லை என்பது முழு நாடும் அறிந்ததே. தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அப்போது அமைச்சரவை அமைச்சராக இருந்தார். இந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, அதைப் பற்றி விசாரிக்க பாராளுமன்றக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

நான் தவறாக இருந்தால் என்னைத் திருத்தவும். எனக்குத் தெரிந்தவரை, இந்த பயங்கரவாத தாக்குதல் குறித்து எவ்.பி.ஐ விசாரணை நடத்தியது. அந்த அறிக்கை கொடுக்கப்பட்டது. எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் கர்தினால் அவர்களின் வேண்டுகோளின்படி அந்த அறிக்கையை வழங்குமாறு தூதுவர் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்த அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை சமர்ப்பிக்கவும். அதே போன்று மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். எப்.பி.ஐ.யை விட சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என்றால், அது எப்படி செய்யப்பட வேண்டும் என்பது பற்றி பேச வேண்டும்.

இது தொடர்பில் யாருக்காவது சந்தேகம் இருந்தால் அந்த சந்தேகத்தை நீக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதற்கான பின்னணியை அமைக்க வேண்டும். இல்லையெனில், உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு படைகளை நிறைவேற்று அதிகாரம், சட்டமன்றம் மற்றும் நீதித்துறையால் தாக்கி அழிக்க முடியாது. அப்படி நடந்தால் நாட்டின் கதி என்னவாகும் என்பதை சிந்திக்க வேண்டும்-என்றார். (அ)

## போதை...

பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பெரும் போதைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்தப் போதைப்பொருள் கும்பல் குறித்து தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மனிதப்...

இருப்பதால் அங்கு செல்ல முடியாது என்று கூறிய நிலையில் தொடர்ந்தும் இடையூறுகளை பொலிஸார் ஏற்படுத்தினர்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் நீதிபதி அகழ்வு இடம்பெறும் பகுதியில் இருந்தே செய்தியாளர்களை சேகரிக்குமாறு அனுமதியளித்தார். (ஐ)

## போலி...

செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

ஆசிரியர் சேவை பதவிநிலை உயர்வு பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேற்று சான்றிதழ் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டபோதே அது போலியானது எனக் கண்டறியப்பட்டு மோசடி குற்றச்சாட்டின் கீழ் சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலை ஒன்றில் கற்பித்த ஒருவரே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

குறித்த நபர் இராணுவ சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணி யாற்றிய சில வருடங்களின் பின் மாகாண கல்வி அமைச்சால் தொண்டர் ஆசிரியராக இணைக்கப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவை தரம் 3இற்கு உள்ளீர்க்கும் போது குறித்த நபருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

3 வருடங்களுக்கு மேலாக ஆசிரிய ராக சம்பளம் பெற்று வந்த நிலையில் பதவிநிலை உயர்வுக்காக கல்வித் தகமை ஆவணங்களை அவர் சமர்ப்பித்துள்ளார். க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சை சான்றிதழ் பரீட்சைகள் திணைக்களத்துக்கு உறுதிப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

அவற்றில் க.பொ.த. உயர்தர பரீட்சை சான்றிதழ் சுட்டெண் தவறு என்பது கண்டறியப்பட்டு பரீட்சைகள் திணைக்களத்தினால் பொலிஸ் திணைக்களத்துக்கு குறித்த நபர் மீது மோசடி குற்றச்சாட்டின் கீழ் அறிக்கையிடப்பட்டது.

பொலிஸ் திணைக்களத்தினால் குறித்த நபர் மீதான விசாரணை யாழ்ப்பாணம் பொலிஸ் சிறப்பு குற்ற விசாரணை பிரிவுக்கு மாற்றப்பட்டது.

பொலிஸ் பரிசோதகர் குணரோஜன் தலைமையிலான சிறப்பு குற்ற விசாரணை பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து மோசடி நபரை நேற்று கைது செய்தனர்.

அத்துடன், அவருக்கு உயர்தரப் பரீட்சையின் போலி சான்றிதழை தயாரித்து வழங்கிய நபரும் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மோசடி நபர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளில் சித்தியடையவில்லை என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் இன்று யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-03)

## சர்வதேச...

அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் முரண்பட்டு கொண்டால் ஒரு போதும் தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ள முடியாது. குண்டு தாக்குதலால் நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் நான் ஒரு தரப்பினரால் இனவாதியாகவும் இரத்தத்தை காண்பதற்கு ஆசை கொண்டுள்ள நபர் என்றும் கடுமையாக விமர்சிக்கப்பட்டேன்.

நல்லாட்சி அரசாங்கத்தின்போது நீதியமைச்சர் பதவியில் இருந்து கொண்டு அடிப்படைவாதம் தொடர்பில் நான் பாராளுமன்றத்தில் உரையாற்றினேன். அதன் பின்னர் நான் கடுமையாக விமர்சிக்கப்பட்டேன். எமது அரசாங்கத்தின் உறுப்பினர்களே என்னை விமர்சித்தார்கள். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மாத்திரமே சிறந்த முறையில் செயல் பட்டார்.

நீதியமைச்சர் குறிப்பிட்ட விடயத்தை அலட்சியப்படுத்தக்கூடாது. உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ரவூப் ஹக்கீம் மாத்திரமே நடுநிலையுடன் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால், எந்த நடவடிக்கையும் அப்போது எடுக்கப்படவில்லை. என்னை விமர்சிப்பதை மாத்திரமே இலக்காகக்கொண்டு அப்போதைய அரசாங்கம் செயல்பட்டது. இறுதியில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை முன்னெடுக்க தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஆனால், அதற்கு உரிய தரப்பினர் சாதகமான நிலைப்பாட்டை தெரிவிக்கவில்லை. ஆகவே, குண்டுத் தாக்குதல் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியின் பிரச்சினையில்லை. அன்று தடுக்கக்கூடிய அழிவை தடுக்காத காரணத்தால்தான் பலர் உயிரிழந்தார்கள். ஆகவே, இவ்விடயத்தில் பாராளுமன்றம் பொறுப் புடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## கொக்குத்...

முதலாவது மனித எச்சத்தின் பச்சைநிற நீளக்காற் சட்டையில் 3204 என்ற இலக்கமும், முழுநீளக் கை மேற்சட்டையும் 3174 இலக்கமிடப்பட்டு பெண்களின் உள்ளாடைகளும் காணப்பட்டன.

தொடர்ந்து இரண்டாவது மனித எச்சம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அதிலும் பச்சைநிறக் முழுநீளக் காற்சட்டையும், முழுநீளக் கை மேற்சட்டையும், 1564 இலக்க மிடப்பட்டு பெண்களின் உள்ளாடை களும் காணப்பட்டன.

இதேவேளை, அகழ்ந்தெடுக்கப்பட்ட இரு மனித எச்சங்களிலும் துப்பாக்கி தோட்டாக்கள் இருந்தன. கறுப்பு நிறத்திலான நூலாலேயே ஆடைகளில் இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

மேலும் குறித்த அகழ்வு பணி இடம்பெறும் இடத்தில் தொல்லியல் ஆய்வாளர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி, சட்டத்தரணி ரனித்தா ஞானராசா, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், தடயவியல் பொலிஸார், அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் பங்கேற்றிருந்தனர்.

அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்களும், தடய பொருட்களும் பொதியிடப்பட்டு, சட்ட மருத்துவ அதிகாரியால் பகுப்பாய்வுக்கு கொண்டு செல்லப்பட்டது.

கடந்த முறை அகழ்வின் போது 13 மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சனல் 4 குற்றச்சாட்டின் தன்மை குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்

கொழும்பு, செப். 09

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சனல் 4 காணொளியின் குற்றச்சாட்டின் தன்மை குறித்து இலங்கை பாராளுமன்றம் தீர்மானிக்க வேண்டும் என நீதி அமைச் சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று தெரிவித்துள்ளார்.

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆண்டு இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் ஈஸ் டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சர்வதேச விசாரணையை முன்மொழிந்தார். ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக அவருக்கு எந்தத் தரப்பிலும் சாதகமான பதில் கிடைக்க வில்லை. எனவே, விசாரணையின் தன்மை குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்” என பாராளுமன்றத் தில் அறிக்கையொன்றை விடுத்த நீதி அமைச்சர் கூறினார். (அ)

# சுகாதாரத் துறைமீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது!

கொழும்பு, செப். 09

சுகாதாரத்துறை தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போயிருக்கிறது. அந்த நம்பிக்கையை ஏற்படுத்த சுகாதாரத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபேதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் சுகாதாரத் துறை மாத்திரமல்ல நாட்டின் எதிர்காலம் தொடர்பாகவும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அதனால்தான் அனைத்து துறைகளைச் சேர்ந்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேற முயற்சிக்கின்றனர். சுகாதாரத்துறையில் இடம்பெறும் திருட்டு, கொள்ளை, மோசடிகள் காரணமாகவே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது.

மக்கள் இன்று பெரும் அசௌகரிங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கண் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றால், குருடாக்கி அனுப்புகிறார்கள்.

ஒரு சிறுநீரகத்தில் சிக்கல் இருப்பதாக மருத்துவமனைக்கு சென்றால் இரண்டு சிறுநீரகங்களையும் எடுத்து விடுகிறார்கள். காய்ச்சலுக்கு மருந்து எடுக்க சென்றால் கையை வெட்டி விடுகிறார்கள். இந்த நிலைமையில் மக்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு செல்லாமல் வீடுகளிலேயே இருந்து மரணிப்பது நல்லது என்ற நிலைக்கும் வந்துள்ளனர்.

அதனால் மக்களுக்கு சுகாதாரத்துறை தொடர்பாகவும் இந்த அதிகாரிகள் தொடர்பாகவும் நம்பிக்கை இல்லை. இதில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே மக்களுக்கு சுகாதாரத்துறை தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். அதனையே நாங்கள் கோருகிறோம்.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வெளிப்படுத்தல்களை அரசாங்கம் திசை திருப்ப முயற்சிக்கிறது. அரசாங்கத்தில் இருக்கும் முஷாரப் எம்.பியும் இதற்கு துணைபோவது அவர் முஸ்லிம் சமூகத்துக்கு செய்யும் துரோகமாகும் - என்றார். (ஐ)

## சுகாதார...

தோற்கடிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான மருத்துவர் காவிந்த ஜயவர்த்தன கடந்த புதன்கிழமை நம்பிக்கையில்லா பிரேரணையை சபையில் முன்வைத்தார்.

மருந்து தட்டுப்பாடு,தரமற்ற மருந்து கொள்வனவு, மருத்துவ சிகிச்சையின் போதான மரணங்கள், பாதிப்புகள் உள்ளிட்ட காரணங்களுக்காகவே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை கொண்டுவரப்பட்ட இந்த நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் மாலை 5. 35 மணிக்கு முடிவுக்கு வந்தது.

இதன்போது நம்பிக்கையில்லா பிரேரணையை அனுமதிக்கின்றதா என சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபையை கேட்டபோது, எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பு கோரினார். அதன் பிரகாரம் மாலை 5. 40 மணிக்கு இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில், பிரேரணைக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கை தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே .வி.பி, சுயாதீன எதிரணி எம். பிக்கள் குழு வாக்களித்தது.

இதேவேளை, நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக அரச தரப்பான சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து சுயாதீன எதிரணி எம். பிக்களான நிமல் லான்சா, ஏ. எல். எம். அதாவுல்லா ஆகியோரும் வாக்களித்தனர்.

இந்த வாக்கெடுப்பில் 38 எம். பிக்கள் பங்கேற்கவில்லை. (ஐ)

## அடுத்த...

தேர்தலுக்கு உத்தர விட்டிருப்பேன். தோல்வி பயம் காரணமாக ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கு செல்லவில்லை.

நாட்டின் வீழ்ச்சியை ரணில் விக்கிரமசிங்கவால் விரைவாகத் தடுத்து நிறுத்த முடிந்தது. ஆனால், ஊழல் அரசியல் வாதிகளுடன் இணைந்து பணியாற்றிய தால் அவரால் முன்னேற முடியவில்லை.

ஊழல் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அரசில் உள்ளார்கள். ரணில் திருடுகின்றார் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், அவரை சுற்றியுள்ள அனைவரும் திருடுகின்றார்கள்.

உதாரணத்துக்கு சுகாதார அமைச்சரை பாருங்கள். அவரின் அமைச்சில் ஊழல், மோசடி இடம்பெற்றுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற மருந்துகளால் மக்கள் இறந்துள்ளார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். அவரை அமைச்சு பதவியில் இருந்து மட்டுமல்லாமல் பாராளுமன்றத்திலிருந்தும் அகற்ற வேண்டும். அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் வலுவான பிரேரணைகளை கொண்டு வரவேண்டும்.

ஊழல், மோசடியே நாட்டை பின்னுக்குத் தள்ளும். இவ்வாறான ஊழல், மோசடி வஞ்சகர்கள் அதிகாரத்தில் உள்ளார்கள். மக்கள் கோபமாக இருக்கின்றார்கள். கோட்டாபய ராஜபக்ஷவின் விலகலுக்குப் பின்னர் அவர்கள் எதிர்பார்த்தது நிறைவேறவில்லை. அடுத்த ‘அறகலய’ நிம்மதியாக இருக்காது. அது இரத்த வெள்ளமாக இருக்கும். மக்களின் கோபத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்.” - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## குளவி கொட்டுக்கு இலக்காகி 5 பேர் நேற்று வைத்தியசாலையில் அனுமதி!

யாழ்ப்பாணம், செப். 09

பலாலி பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

குளவி கொட்டுக்கு இலக்கானவர்கள் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர், அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக, யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டது. (அ)

## கிளிநொச்சி உர விநியோகத்தை விரைவுபடுத்த கலந்துரையாடல்!

கிளிநொச்சி, செப். 09

கிளிநொச்சியில் பெரும்போகத்திற்கான, உர விநியோகத்தினை விரைவுபடுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகத்தில் 28,415 ஹெக்ரேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தநிலையில், அதற்காக உரிய காலத்தில் உர விநியோகத்தை முன்னெடுப்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# தொல்லியல் பணிப்பாளர் பதவி நீக்கப்படவேண்டும்

### ஈ.பி.டி.பி. வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 09

**நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டுவரும் நிலையில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளரின் செயற்பாடுகள் இன முரண்பாடுகளை தூண்டிவிடும் வகையில் இருந்து வருவதால் அவரை பதவியிலிருந்து நீக்கவேண்டும் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளரும், யாழ்ப்பாண மாவட்ட உதவி நிவாகச் செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்த தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் திட்டமிட்டவகையில், ஓர் இனவாத அடிப்படையிலேயே இவ்வாறாக நீதிமன்ற தீர்ப்பை மீறியுள்ளார்.

இவ்வாறான அரசின் உயர் நிலை அதிகாரிகள் செயற்படுகின்ற வேளையில் அரசாங்கம் மூவின மக்கள் வாழும் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவது என்பது ஒரு சவாலாகவே இருக்கும்.

அதேபோன்று மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான இனவாதக் கண்ணோட்டத்துடன் கருத்துக்களை வெளியிடுவதும், செயற்படுவதும் தேசிய நல்லிணக்கம் என்பது உருவாகுவதற்கான முயற்சிகளுக்கு பாரிய தடையாகவே இருந்து வருகின்றது.

அரசியல்வாதிகள் தங்கள் வாக்கு வங்கிகளுக்காகவும் தமது அரசியல் இருப்புக்காகவும் இதேபோன்ற இனவாத, மதவாத, பிரதேசவாதக் கருத்துக்களை அவ்வப்போது ஆக்ரோசமாக வெளியிடுவதை ஒரு தொழிலாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால், அரச இயந்திரமான அரச உயர்நிலை அதிகாரிகள் உயர்ந்த கல்வியாளர்களாகவும், சமூகத்துக்கு ஒரு வழிகாட்டியாகவும், நாட்டை நிர்வகிக்கின்ற பொறுப்பும் உள்ளவர்களான இவர்கள் இவ்வாறாக நீதிமன்றங்களுடைய கட்டளைகளை-உத்தரவுகளை கடைப்பிடிப்பதும் அதை செயற்படுத்தவதும் அவர்களது முக்கிய பணியாகும்.

ஆனால் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நீதிமன்ற தீர்ப்பை அவமதித்து நீதிமன்றத்தின் கண்டனத்துக்கும் உள்ளாகியுள்ள நிலையில் அவர் தொடர்ந்தும் அப்பொறுப்பில் இருப்பதென்பது மரபல்ல.

இதன் தாற்பரியங்களை விளங்கிக்கொண்ட அரசு தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் பாரிய பணியை மேற்கொண்டுவரும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான இனவாத, மதவாத கண்ணோட்டத்துடன் செயற்படும் பணிப்பாளரை உடனடியாக அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கவேண்டும் - என்றார். (அ-2)

# தாதியர் வெற்றிடங்களில் திட்டமிட்டு புறக்கணிக்கப்படும் தமிழ் மாணவர்!

### சபையில் சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 09

நீண்ட காலமாக தாதிய வெற்றிடங்களுக்கு சிங்கள மாணவர்கள் மட்டுமே சட்டத் திருத்தங்களுடன் உள்வாங்கப்படுவதுடன் தமிழ் மாணவர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பாராளுமன்றில் குற்றச்சாட்டினாளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நிலவும் சுகாதாரத்துறையின் பிரச்னைகள், தற்கொலைகள் மற்றும் பொருளாதாரப் பிரச்னைகள் தொடர்பான விடயங்களை புள்ளி விவரங்களுடன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு நாட்டினுடைய மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் சுகாதாரம் அடிப்படை மனித உரிமையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

வெளிநாடுகளில் அடிப்படை மனித உரிமையாகக் காணப்படும் சுகாதாரம் இலங்கையில் வியாபாரப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது.

அமைச்சருக்கும் அவரோடு இணைந்தவர்களுக்கும் வருமானம் தருகின்ற துறையாகக் காணப்படுவதோடு சில வைத்திய சங்கங்களும் தங்களுடைய முகவர்களூடாக மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் முகவர்களாகச் செயற்படுகின்றார்களே தவிர நீதியான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

ஒட்டுமொத்தமாக பகல் கொள்ளையடிக்கும் மாபியாக்களின் மையப் பிரதேசமாக சுகாதாரத்துறை மாறியுள்ளது.

பேராதனை மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துக் கல்லூரி, மட்டக்களப்பு பல்கலைகழக மருத்துவக் கல்லூரி உட்பட ஏனையவற்றிலிருந்து வெளியேறும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களில் எத்தனை பேர் இங்கு பணி புரிகின்றார்கள் என்ற கேள்வி காணப்படுகின்றது.

இவற்றில் நீண்ட காலமாக சிங்கள மாணவர்கள் மட்டுமே சட்டத் திருத்தங்களோடு உள்வாங்கப்படுவதுடன் தமிழ்த் தாதியர்கள் திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகின்றனர். இதனால் வடகிழக்கில் அனேகமான வைத்தியசாலைகளில் தாதியர்களற்ற துப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு நாளாந்தம் 420 க்கு மேற்பட்டவர்களும் சிகிச்சைகளுக்காக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களும் வருகை தருகின்றனர். ஆனால் அங்கு தொழில்நுட்ப சாதனங்களின் பற்றாக்குறையும் வைத்தியர்களின் பற்றாக்குறையும் நிலவுகின்றது.

இதேவேளை, மன்னர்களின் ஓலைச் சுவடிகளை ஆதாரமாக வைத்து இலங்கையில் ஆயுள்வேதம் என்பதை அறிமுகம் செய்த யாழ்ப்பாணத்தில் காணப்படும் நூறு வருடம் பழமை வாய்ந்த லங்கா ஆயுள்வேதக் வைத்தியக் கல்லூரி தற்சமயம் மூடப்படும் நிலையிலுள்ளது. பொறுப்பு வாய்ந்த சுகாதார அமைச்சர் நடைபெறும் விடயங்களுக்குப் பதிலளிக்க முடியாமல் காணப்படுவதால் அவர் அமைச்சுப் பதவியிலிருந்து அகற்றப்படவேண்டியவர் - என்றார். (அ)

# தெற்காசிய கல்வி மையமாக இலங்கை மாற்றப்படும்!

### உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, செப். 09

தெற்காசியாவின் கல்வி மையமாக இலங்கை மாற்றப்படும் என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அந்த நோக்கத்துக்காக புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ், ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் அறிவுசார் சுதந்திரத்தை உருவாக்கவும் அனைத்து பல்கலைக்கழகங்களையும் சமூகத்துடன் உறவை ஏற்படுத்தவும் பல்கலைக்கழகங்களை சர்வதேச மயமாக்கவும் முன்மொழிந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனை தெரிவித்தார்.

உலகத் தரத்தின்படி, ஒரு பல்கலைக்கழகத்தில் 15 மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் என்ற விகிதத்தில் கல்வி கட்டமைப்பு இருக்க வேண்டும். ஆனால், நமது நாட்டில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் 30 மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் மாத்திரமே இருக்கின்றனர். உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பௌதிக வளங்கள் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்கும் கல்வி சீர்திருத்தம் முன்மொழியப்பட வேண்டும்.

மேலும், உயர்தரத்தில் கல்வி கற்றும் மாணவர்களில் அதிகமானோர் கலைப் பிரிவில் கற்று வருகின்றனர். இதற்கு காரணம், இந்த நாட்டில் உள்ள உயர்தர பாடசாலைகளில் பெரும்பாலானவற்றில் கலைப் பிரிவு பாடங்கள் மாத்திரமே கற்றுக்கொடுக்கப்படுகின்றன. எனவே, பல்கலைக்கழகக் கல்விச் சீர்திருத்தத்தில், கலைப் பிரிவில் படிக்கும் மாணவ, மாணவியரும் இளங்கலை விஞ்ஞான பட்டம் பெறும் வகையில் கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும். உயர்தர விஞ்ஞான பாடங்கள் தொடர்பில் பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேரத்தை பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது அதிகரித்துள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப பௌதிக மற்றும் மனித வளங்களை அதிகரிக்க கல்வி சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்ள வேண்டுமாயின், ஆய்வு கூடங்கள், விடுதிகள் நிர்மாணிப்பது உள்ளிட்ட பௌதிக வசதிகளை வழங்கவும் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்கும் இரண்டு இலட்சம் கோடி ரூபாய் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

என்றும் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார். (ஐ)

# ஜயசேகரவின் உறுப்புரிமை நீக்கம் தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு!

கொழும்பு, செப். 09

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு கட்சி எடுத்த தீர்மானத்தை அமுல்படுத்த தடை உத்தரவு பிறப்பிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுத்துள்ளது.

அத்துடன், தயாசிறி ஜயசேகர வகித்து வந்த கட்சியின் பொதுச் செயலாளராக கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட சரத் ஏக்கநாயக்க அந்த பதவியில் செயற்படுவதற்கு நீதிமன்றால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

22ஆம் திகதி வரை அவர் செயலாளராக பதவி வகிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் அரசமைப்புக்கு முரணான வகையில் தனது கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த முறைப்பாட்டின் ஆரம்பக்கட்ட பரிசீலனையின் பின்னர் கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## உலகக் கிண்ணத் தொடர் நெதர்லாந்து அணி அறிவிப்பு

ஆம்ஸ்ரர்டாம், செப். 09

உலகக் கிண்ணத் தொடருக்கான நெதர்லாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் வரும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்த தொடரில் மொத்தம் 10 அணிகள் கலந்து கொள்கின்றன.

தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோதவுள்ளன. உலகக் கிண்ணத் தொடருக்கு இன்னும் ஒரு மாத காலமே உள்ள நிலையில் உலகக்கோப்பையில் பங்கேற்க உள்ள அணிகள் தங்களது 15 பேர் கொண்ட வீரர்கள் பட்டியலை அறிவித்து வருகின்றன.

இந்நிலையில் தகுதி சுற்று போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் உலகக்கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பை பெற்ற நெதர்லாந்து அணி தங்களது 15 வீரர்கள் கொண்ட பட்டியலை நேற்று அறிவித்துள்ளது.

ஸ்காட் எட்வர்ட்ஸ் தலைமையிலான நெதர்லாந்து அணியில் அனுபவ வீரர்களான வான் டெர் மெர்வே மற்றும் அக்கர்மேன் இருவரும் இடம்பிடித்துள்ளனர்.

அணி விவரம் - ஸ்கொட் எட்வர்ட்ஸ் (அணித் தலைவர்), மேக்ஸ் ஓ“டவுட், பாஸ் டி லீட், விக்ரம் சிங், தேஜா நிடமானுரு, பால் வான் மீகெரென், கொலின் அக்கர்மேன், ரோலோப் வான் டெர் மெர்வே, லோகன் வான் பீக், ஆர்யன் தத், ரியான் க்ளீன், வெஸ்லி பர்ரேசி, சாகிப் சுல்பிகார், ஷரிஸ் அஹ்மத் மற்றும் சைப்ரண்ட் ஏங்கல்பிரெக்ட்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிராக 3 விக்கெட்களால் ஆஸி. வெற்றி!

ஜோகன்னர்ஸ்பேர்க், செப். 09

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது.

இதன்படி இந்த இரு அணிகளுக்கு இடையே முதலில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட இருபது -20 தொடரை அவுஸ்திரேலிய அணி முழுமையாக கைப்பற்றி தென்னாபிரிக்காவை வெள்ளையடிப்பு செய்தது.

இந்நிலையில், இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் மிட்செல் மார்ஷ் முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இதனைத்தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 222 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் சார்பில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அணித்தலைவர் பவுமா 142 பந்துகளில் 114 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற மார்கோ ஜோன்சன் 32 (40) ஓட்டங்கள் எடுத்தார்.

அவுஸ்திரேலியா அணியின் சார்பில் சிறப்பாக பந்து வீசிய ஹெசில்வுட் 3 விக்கெட்களும், ஸ்ரோய்னிஸ் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 223 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணியில் டேவிட் வோர்ணர் ஓட்டம் ஏதும் எடுக்காமல் வெளியேற, அவரைத் தொடர்ந்து களமிறங்கிய மிட்செல் மார்ஷ் 17 ஓட்டங்களும், ஜோஸ் இங்லீஸ் 1 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மறுமுனையில் சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த டிராவிஸ் ஹெட் 33 (28) ஓட்டங்களில் பிடியெடுப்பாகி வெளியேறினார்.



அடுத்து களமிறங்கிய வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் வெளியேற, மார்னஸ் லபுஷான் மற்றும் அஸ்ரன் அகார் ஆகியோர் சேர்ந்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த இணை லபுஷான் தனது அரைச்சதத்தை பதிவு செய்தார்.

தொடர்ந்து, ஓட்டங்கள் குவித்த இந்த இணை அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது. முடிவில் மோர்னஸ் லபுஷான் 80 (93) ஓட்டங்களும், அஷ்ரன் அகார் 48 (69) ஓட்டங்களும் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 40.2 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 225 ஓட்டங்கள் எடுத்தது.

தென்னாபிரிக்க அணியின் சார்பில் அதிகபட்சமாக ரபாடா மற்றும் கோட்சி ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதன்மூலம் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது.

இதன்படி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது.

# ஐ. சி. சியின் சிறந்த வீரர் தெரிவு; பட்டியலில் பாகிஸ்தான் வீரர்கள்!




டுபாய், செப். 09

ஐ. சி. சியின் ஒகஸ்ட் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் 2 பாகிஸ்தான் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஒவ்வொரு மாத மும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது.

இந்நிலையில் ஒகஸ்ட் மாதத்துக்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்ய தலா 3 வீரர், வீராங்கனைகளின் பெயர்களை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

இதன்படி, ஒகஸ்ட் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பட்டியலில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம், மற்றொரு பாகிஸ்தான் வீரரான ஷதாப் கான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணியை சேர்ந்த அதிரடி ஆட்டக்காரர் நிக்கோலஸ் பூரண் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சிறந்த வீராங்கனை விருதுக்கு புதுமுக வீராங்கனைகள் பரிந்துரை பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இதில் நெதர்லாந்தை சேர்ந்த ஐரிஸ் ஸ்வில்லிங், மலேசிய வீராங்கனை ஐன்னா ஹமிசா ஹாஷிம் மற்றும் அயர்லாந்தை சேர்ந்த அர்லீன் கெல்லி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்; அல்கரஸ் அரையிறுதியில்!

நியூயோர்க், செப். 09

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கரஸ் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்று வரும் இந்த தொடரில் ஆடவருக்கான காலிறுதி சுற்றில் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கரஸ், 12ஆம் நிலை வீரரான ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஜிவெரேவுடன் மோதினார். 2 மணி நேரம் 30 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அல்கரஸ் 6-3, 6-2, 6-4 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

நடப்பு சம்பியனான அல்கரஸ் அரை சுற்றில் 3ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனியல் மெத்வதேவுடன் மோதுகிறார். (ஐ)





## சபலெங்கா, மேடிசன் அரையிறுதிக்கு தகுதி!

நியூயோர்க், செப். 09

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மகளிர் பிரிவில் அரினா சபலெங்கா, மேடிசன் கீஸ் ஆகியோர் அரையிறுதி சுற்றில் நுழைந்தனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் 2ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா, 23ஆம் நிலை வீராங்கனையான சீனாவின் ஜெங் குயின்வெனுடன் மோதினார்.

ஒரு மணி நேரம் 13 நிமிடங்களில் முடிவடைந்த இந்த ஆட்டத்தில் சபலெங்கா 6-1, 6-4 என்ற நேர் செற்றில் எளிதாக வெற்றி பெற்று அரையிறுதி சுற்றில் நுழைந்தார்.

அரையிறுதி சுற்றில் அரினா சபலெங்கா, 17ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் மேடிசன் கீஸுடன் மோதுகிறார். 2017ஆம் ஆண்டு அமெரிக்க ஓப்பனில் 2ஆவது இடம் பிடித்த மேடிசன் கீஸ், காலிறுதி சுற்றில் 9ஆம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் மார்கெட்டா வோண்ட்ரூசோவாவை எதிர்கொண்டார். இதில் மேடிசன் கீஸ் 6-1, 6-4 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றார்.

# ஜி-20 மாநாட்டில் உக்ரைன் விவகாரம்: புயலைக் கிளப்பினால் இந்தியா எப்படி கையாளப்போகிறது?

ஜுபைர் அகமது

ஜி 20 நாடுகளின் 18 ஆவது உச்சிமாநாட்டை இந்தியா தலைமை தாங்கி நடத்துகிறது. இந்த மாநாடு செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய திகதிகளில் டெல்லியில் நடைபெறவுள்ளது.

இந்தியா முதன்முறையாக நடத்தும் இந்த மாநாடு டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தின் பாரத் மண்டபத்தில் இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளது.

சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் நடைபெறும் நகரின் பெரிய இடமான பிரகதி மைதானத்தில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்ட உலகின் பல தலைவர்கள் சந்தித்து பேச உள்ளனர்.

இந்த நிலையில் சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புடின், ஜி 20 மாநாட்டில் பங்கேற்காதது சர்வதேச அரசியலில் பல்வேறு கேள்விகளை எழுப்பி உள்ளது.

மேலும், இந்தோனேசியாவின் பாலி நகரில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி 20 மாநாட்டில், ரஷ்யா -உக்ரேன் போர் தொடர்பாக, வளர்ந்த அல்லது மேற்கத்திய நாடுகள் மற்றும் 'குளோபல் சவுத்' என்று அழைக்கப்படும் உலகின் பெரும்பாலான வளரும் நாடுகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.



அதேபோன்று, டில்லியில் நடைபெறவுள்ள மாநாட்டிலும் உக்ரேன் போர் விவகாரம் எதிரொலிக்கும் என்பது மேற்கத்திய நாடுகளின் தலைவர்கள், வெளியுறவு நிபுணர்கள் உள்ளிட்டோரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**மாநாட்டில் உக்ரேன் போர் விவகாரம் எதிரொலிக்குமா ?**

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் அண்மையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர், "உக்ரேன் போர் எப்போதும் எங்கள் எல்லா உரையாடல்களிலும் இடம்பெறும் முக்கிய விஷயங்களில் ஒன்றாகும். ஜி 20 மாநாட்டில் இது பெரிய பிரச்னையாக எழுப்பப்படும் என்பதில் சந்தேகமில்லை" என்று மில்லர் தெரிவித்திருந்தார்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, டில்லி உச்சி நாட்டில் பங்கேற்பதை கடந்த வாரம் உறுதிப்படுத்தினார். அப்போது அவர், "உலகம் உக்ரேன் பக்கம் நிற்கிறது என்பதை நாங்கள் தொடர்ந்து உறுதி செய்வோம்" என்று திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.

குஜராத் தலைநகர் காந்த நகரில் ஜி 20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளை சேர்ந்த கவர்னர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் ரஷ்யா - உக்ரேன் போர் தொடர்பாக கருத்து வேறுபாடு எழுந்ததால், கூட்டம் தொடர்பான இறுதி அறிக்கை வெளியிடப்படாமல் இரண்டு நாட்கள் நடந்த கூட்டம் முடிவுக்கு வந்தது.

இதேபோன்று, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஜி 20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்திலும் உக்ரேன் போர் தொடர்பாக விவாதம் எழுந்தது. இதையடுத்து, இக்கூட்டத்தின் முடிவிலும் இறுதி அறிக்கை வெளியிடப்படவில்லை.

ஜி 20 நாடுகளின் ஆலோசனைக் கூட்டங்களில் உக்ரேன் போர் விவகாரம் தொடர்ந்து எதிரொலித்து வந்து கொண்டிருந்த நிலையில், ஜி 20 உச்சி மாநாட்டின் நோக்கம் குறித்த தனது நிலைப்பாட்டை இந்தியா கடந்த ஜூலை மாதம் தெளிவுப்படுத்தி இருந்தது.






"உலக பொருளாதார பிரச்னைகளைப் பற்றி விவாதிப்பதற்காகத் தான் ஜி 20 உச்சி மாநாடு நடத்தப்படுகிறது," என்று டில்லியில் நடைபெறவுள்ள ஜி 20 உச்சி மாநாட்டின் ஆயத்தப் பணிகளை மேற்கொண்டு வரும் அதிகாரியான அமிதாப் காந்த் கடந்த ஜூலை 13 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

மேலும், "ரஷ்யா-உக்ரேன் போர் வளரும் அல்லது வளர்ந்து வரும் நாடுகளால் உருவானது அல்ல. போர் எங்களின் முன்னுரிமை இல்லை. அது வேறொருவருக்கு முன்னுரிமையாக இருக்கலாம்" என்றும் அப்போது அவர் கூறியிருந்தார்.

**பாலி உச்சி மாநாட்டு நிகழ்வுகள் டில்லியிலும் எதிரொலிக்குமா?**

இந்தோனேசியாவின் பாலி நகரில் கடந்த ஆண்டு நவம்பரில் ஜி 20 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாடு நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன், உக்ரேன் மீது ரஷ்யா முழு அளவிலான ராணுவத் தாக்குதலை நடத்தியது.

ரஷ்யாவின் இந்த ராணுவ நடவடிக்கை பாலி உச்சி மாநாட்டில் முக்கிய இடம் பிடித்தது. மாநாட்டின் முடிவில் தலைவர்கள் வெளியிட்டிருந்த பிரகடனத்தில் உக்ரேனுக்கு எதிரான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு கடும்



கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் உக்ரேனில் இருந்து ரஷ்யா நிபந்தனையின்றி முழுமையாக வெளியேற வேண்டும் என்றும் அந்த பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், ரஷ்யா -உக்ரேன் போர் தொடங்கி ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும் தொடர்ந்து யுத்தம் நடைபெற்று வருகிறது. இந்தப் போர் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

உலக அளவில் பொருளாதாரம் மற்றும் உலக விநியோக சங்கிலியில் உக்ரேன் போர் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

மேலும் இதன் விளைவாக, உலக பணவீக்கம் மற்றும் வேலையில்லா திண்டாட்டம் விண்ணை முட்டும் அளவுக்கு அதிகரித்துள்ளது.

அத்துடன், ஆப்பிரிக்கா உள்ளிட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய பல நாடுகளில் உணவுப் பற்றாக்குறையை இந்த போர் ஏற்படுத்தியுள்ளது.

உக்ரேன் போர் குறித்து பாலி மாநாட்டில் எழுப்பப் பட்ட குரல், டெல்லி ஜி 20 உச்சி மாநாட்டில் எதிரொ லிக்கும் என்று வெளியுறவுக் கொள்கை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

"டெல்லி உச்சி மாநாட்டில் உக்ரேன் பிரச்னைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அமெரிக்கா கூறியுள் ளதுடன், நேட்டோ நாடுகள் பலவும் இதே கருத்தை வெளிப்படுத்தி உள்ளன. எனவே இந்த விவகாரம் குறித்து உச்சி மாநாட்டில் விவாதிக்கப்படும்போது இந்தியா நிலைப்பாடு தெளிவாகும்" என்று டில்லியைச் சேர்ந்த வெளியுறவுக் கொள்கை நிபுணரும், இந்திய அரசின் கொள்கைகளை ஆதரிப்பவருமான டாக்டர் சுவரோக் மல் தத்தா கூறியுள்ளார்.

அப்போது இந்தியா உக்ரேன், ரஷ்யா மற்றும் அமெரிக்காவுக்கு ஆதரவான அல்லது எதிரான நிலைப்பாட்டை எடுக்காது. மாறாக பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னைக்கு தீர்வு காணும்படி மீண்டும் வலியுறுத்தும் என்பது தத்தாவின் கணிப்பாக உள்ளது.

"அமெரிக்கா மற்றும் மேலைநாடுகளுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே தற்போது மறைமுகப்போர் நடைபெற்று வருகிறது. இத்தகைய சூழலில் ஜி 20 மாநாட்டை தலைமை ஏற்று நடத்தும் பொறுப்பு இந்தியாவுக்கு கிடைத்துள்ளது.

அதாவது வல்லரசு நாடுகளுக்கு இடையே பதற்றமான சூழல் நிலவிவரும் சூழலில் இந்தியாவுக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்கிறார் 2009 -11 காலகட்டத்தில் அமெரிக்காவுக்கான இந்திய தூதராக இருந்த மீரா சங்கர்.

ஜி 20 உச்சி மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில், உக்ரேன் விவகாரம் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. ஏனெனில் இது பொருளாதார மேம்பாடு குறித்து விவாதிக்கும் இடம்




என்றும் அவர் கூறியுள்ளார்.

"உலகம் தற்போது ரஷ்ய - உக்ரேன் போரில் கவனம் செலுத்துகிறது. அதே நேரத்தில் ஜி 20 நாடுகளின் மாநாடு பெரும்பாலும் பொருளாதார விஷயங்களில் கவனம் செலுத்துகிறது" என்று ஹாங்காங்கை தளமாகக் கொண்ட வெளியுறவுக் கொள்கை சிந்தனைக் குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ஹெய் சிங் டசோ ஒப்புக் கொள்கிறார்.

**டில்லி உச்சி மாநாட்டின் வெற்றிக்கான அளவுகோல் என்ன?**

ஜி 20 மாநாட்டுக்கு தலைமைத் தாங்கும் நாடு என்ற முறையிலும், இந்த அமைப்பின் புரவலர் என்ற விதத்திலும் ரஷ்ய - உக்ரேன் போரை நிறுத்த இந்தியா முன்மொழிய வேண்டும் என்று வலியுறுத்துகிறார் ஹெய் சிங் டசோ

"உக்ரேனில் போர் ஒரு பிரச்னை மற்றும் நெருக்கடி என்று எண்ணுகிறேன். இதை கருத்தில் கொண்டுதான் ரஷ்ய - உக்ரேன் மோதலில் மத்தியஸ்தம் செய்ய கடந்த ஆண்டில் பல்வேறு நாடுகள் முயன்றன.

சீனாவிடமிருந்து இதுதொடர்பாக ஒரு எழுத்துப் பூர்வ முன்மொழி உள்ளது. பிரேசில் அதிபர் லூலா, தென்னாப்பிரிக்க தலைவர்கள் உள்ளிட்டோர் இந்த பிரச்னையில் சமாதான முயற்சியை முன்னெடுத்திருந்தனர்.

எனவே, உக்ரேன் போர் விவகாரத்தில் மத்தியஸ்தம் மற்றும் சமாதான நடவடிக்கைகளை இந்தியா ஊக்குவிக்க வேண்டும் என்று ஹெய் சிங் டிசோ விருப்பம் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரேனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான போர் நிறுத்தம்தான் தற்போது மிக முக்கியம். போருக்கு யார் பொறுப்பு என்பதை பின்னர் தீர்மானித்து கொள்ளலாம். எனவே, உக்ரேன் போர் நிறுத்தம் தொடர்பான முன்மொழிவு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தி உள்ளார்.

"தமது இந்த அறிவுரையின்படி உக்ரேன் போர் நிறுத்தத்திற்கான முன்மொழிவை இந்தியாவால் மேற்கொள்ள முடிந்தால், அது இந்திய பிரதமர் மோடியின் சாதனையாகவும், இந்த ஜி 20 உச்சி மாநாட்டின் வெற்றிக்கான அளவுகோலாகவும் இருக்கும்" என்கிறார் பேராசிரியர் டிசோ.

ஆனால் டிசோவின் இந்த யோசனையில் இருந்து வேறுபடுகிறார் இந்திய முன்னாள் வெளியுறவுத் துறை அதிகாரியும், மும்பையை தளமாகக் கொண்ட 'கேட்வே ஹவுஸ்' என்ற சிந்தனைக் குழுவை நடத்தும் நீலம் தேவ்.

டில்லியில் நடைபெற உள்ள ஜி 20 உச்சி மாநாட்டில் உக்ரேன் பிரச்னை எழுப்பப்படலாம் ஆனால், அதற்கான தீர்வை காண முடியாது என்கிறார் அவர்.

(16ம் பக்கம் பார்க்க)

# ஜி-20 மாநாடு:
# இந்தியா தலைமை தாங்குவதால் சீனா சீர்குலைக்க முயற்சியா?
# ஜின்பிங் வராதது ஏன்?




புதுடில்லியில் இன்றும் நாளையுமும் நடைபெறவுள்ள ஜி 20 நாடுகளின் மாநாட்டில் சீன அதிபர் ஷி ஜின்பிங் பங்கேற்கமாட்டார் என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் திங்கள்கிழமை அறிவித்திருந்தது.

அதிபருக்கு பதிலாக, சீன பிரதமர் லி கியாங் தலைமையிலான குழு இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் என்றும் அமைச்சகம் மேலும் தெரிவித்திருந்தது.

கடந்த மாத இறுதியில் பிரிக்ஸ் நாடுகளின் மாநாடு தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்ற இந்திய பிரதமர் மோடியும், சீன அதிபர் ஷி ஜின்பிங்கும் இருநாடுகளுக்கு இடையேயான எல்லை பிரச்னைகள் குறித்தும் பேசியிருந்தனர்.

ஆனால் இந்த சந்திப்பிற்கு பிறகு, சீனா தனது புதிய தேச வரைப்படத்தை அண்மையில் வெளியிட்டிருந்தது. அதில் அருணாசலப் பிரதேசம் மற்றும் அக்ஷய் சின் பகுதிகள் சீனாவுக்கு சொந்தமானவை எனப் பொருள்படும்படி குறிப்பிடப்பட்டிருந்தது.

சீனாவின் இந்த செயலை அடுத்து, இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பிரச்னை மீண்டும் பூதாகரமாகி உள்ளதாக பார்க்கப்படுகிறது.

இத்தகைய சூழலில் ஜி 20 மாநாட்டில் பங்கேற்க சீன அதிபர் ஷி ஜின்பிங் இந்தியா வந்தால், இருதரப்பு உறவுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட வாய்ப்புள்ளது என்ற எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தற்போது அவர் இந்தியா வரவில்லை என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, ஜி20 மாநாட்டில் சீன அதிபர் பங்கேற்காததை மையாக வைத்து, பவ்வேறு கருத்துகளை வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

ஜி 20 மாநாட்டில் ஷி ஜின்பிங் பங்கேற்காததற்கு சீனா கூறும் காரணங்கள் குறித்தும், இதுதொடர்பாக பல்வேறு வெளிநாட்டு ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் குறித்தும் இங்கு காண்போம்.

**ஷி ஜின்பிங் இந்தியா வராதது ஏன்?**

சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் திங்கள்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, ஷி ஜின்பிங், ஜி 20 மாநாட்டில் பங்கேற்க இந்தியாவுக்கு செல்லாத நிலையில், அவர் ஆன்லைன் மூலமாகவும் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? என்று ஏஎஃப்பி செய்தி முகமையின் செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு, “சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கு ஜி20 மிகவும் முக்கியமான அமைப்பாக திகழ்கிறது. இதன் முக்கியத்துவத்தையும், இதுதொடர்பான நிகழ்வுகளில் பங்கேற்பதன் அவசியத்தையும் சீனா நன்கு உணர்ந்துள்ளது.

இதன் காரணமாகவே, சீன பிரதமர் லி கியாங் தலைமையிலான சீன பிரதிநிதிகள் குழு இந்தியாவில் நடைபெறவுள்ள ஜி 20 மாநாட்டில் பங்கேற்க உள்ளது. சீனாவின் முன்மொழிவுகளை பிரதமர் லி கியாங் மாநாட்டில் முன்வைப்பார்,” என்று மாவோ பதிலளித்தார்.



மேலும், ஜி20 நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை தக்கவைத்து கொள்வதே சீனாவின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், ஜி20 மாநாடு வெற்றிபெற பிற நாடுகளுடன் இணைந்து செயலாற்ற சீன தயாராக உள்ளது என்றும், இதனால் உலக பொருளாதாரம் விரைவில் வளர்ச்சி எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

மாநாட்டில் சீன அதிபர் பங்கேற்காதது குறித்த செய்தியாளரின் இந்த கேள்விக்கு நீண்ட விளக்கம் அளித்த வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர், ஜி20



மாநாட்டில் ஷி ஜின்பிங் பங்கேற்காததற்கான காரணம் குறித்து எந்த பதிலும் அளிக்கவில்லை.

ஷி ஜின்பிங்கை தவிர, ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடினும் ஜி20 மாநாட்டில் பங்கேற்கவில்லை என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

**ஜப்பான் அல்லது ரஷ்யா யார் காரணம்?**

ஜி20 மாநாட்டில் ஷி ஜின்பிங் பங்கேற்காததற்கான காரணத்தை சீன வெளியுறவு அமைச்சகம் வெளிப்படையாக கூறவில்லை.

இந்த நிலையில் சீன அதிபர் இந்தியா வராததற்கான காரணம் குறித்து பிரிட்டன் நாளிதழான ‘கார்டியன்’ செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த 2020 மற்றும் 2021 இல் கொரோனா காலத்தில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் ஷி ஜின்பிங் ஆன்லைன் மூலம் பங்கேற்றார். ஆனால் அவர் இம்மாநாட்டில் பங்கேற்காமல் இருப்பது இதுவே முதல்முறை.



சீனாவின் இந்த நடவடிக்கை இந்தியாவை புறக்கணிப்பதாகவே பார்க்கப்படுகிறது என்று அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதேநேரம். அமெரிக்க ஆதிக்க குழுக்களை விட தனது ஆதிக்க குழுவுக்கு சீனா அதிக முக்கியத்துவம் தருவதன் வெளிப்பாடாகவும் ஜி20 மாநாட்டில் ஷி ஜின்பிங் கலந்து கொள்ளாத முடிவு பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து சீனாவின் அரசியல் நிபுணரான வென் டி சாங் கூறும்போது, “ பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்ற உடனே ஜி20 மாநாட்டில் ஜின்பிங் கலந்து கொள்ளாதது, ‘கிழக்கு வளர்கிறத்து மேற்கு வீழ்ச்சி அடைகிறது’ என்ற சீனாவின் நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாக உள்ளது” என்று வென் டி சாங் கூறியிருந்தார்.

அத்துடன், ஜி 20 மாநாட்டில் பங்கேற்க வரும் ஜப்பான் பிரதமரை ஷி ஜின்பிங் சந்திக்க விரும்பாததும் அவர் இம்மாநாட்டை தவிர்ப்பதற்கான காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

ஜி 20 மாநாட்டின்போது, ஜப்பான் மற்றும் சீன தலைவர்கள் சந்தித்து பேச வாய்ப்புண்டு என்ற எதிர்பார்ப்பு எழுந்திருந்தது.

இந்நிலையில், சீன அதிபர் இந்தியா செல்லவில்லை என்ற தகவல் வெளியாகி இருக்கிறது என்று சாங் கருத்து தெரிவித்துள்ளதாக கார்டியன் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜின்பிங் இந்தியா வராததற்கு வேறென்ன காரணங்கள்?**

ஜப்பான் பிரதமரை சந்திக்க விரும்பாதது போன்ற காரணத்தை தவிர, சீன அதிபர் இந்தியா வராமல் இருப்பதற்கான காரணங்கள் குறித்து, ஃபைனான்சியல் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜி20 மாநாட்டுக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த மேலை நாடுகளின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெளியாகியிருக்கும் அந்த செய்தியில், “ஜி20 மாநாட்டின் முன்னெடுப்புகளுக்கு முட்டுக்கட்டை போடும் நோக்கில் அவர் (ஜின்பிங்) ஆண்டு முழுவதும் உழைத்துள்ளார்.

இந்த பின்னணியில் ஜின்பிங் இந்தியாவுக்கு வராதது ஒன்று புதிய விஷயம் அல்ல” என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக ஃபைனான்சியல் டைம்ஸ் செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜி20 நாடுகளுக்கு இடையே ஒருமித்த கருத்து எட்டப்படாமல் உள்ள நிலையில், இம்மாநாட்டை தவிர்க்கும் நடவடிக்கையை சீன அதிபர் எடுத்துள்ளார்.

தனது இந்த நடவடிக்கையின் மூலம் இந்தியாவுக்கு மட்டுமின்றி, ஜி20 நாடுகளின் மேலாதிக்கத்திற்கும் சீனா அடி கொடுத்துள்ளது என்றும் அந்த அதிகாரிகள் தெரி



வித்துள்ளனர்.

**இந்தியாவின் முயற்சியை சீர்குலைக்கும் சீனா**

இந்தியா - சீனா இடையேயான எல்லைப் பிரச்னையை கருத்தில் கொண்டு, இந்தியா தலைமைத் தாங்கி நடத்தும் ஜி20 மாநாட்டை சீர்குலைக்க சீனா விரும்புகிறது என்று இந்திய நிபுணர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளதாக ஃபைனான்சியல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் உக்ரேன் போரின் விளைவாக, சீனா, ரஷ்யா மற்றும் பிற நாடுகளுக்கு இடையேயான இடைவெளி அதிகரித்துள்ளது.

இதுகுறித்து, கார்னேஜ் சைனா என்ற சிந்தனைக் குழுவின் இயக்குநர் பால் ஹென்லி கூறும்போது, “கடந்த 10 ஆண்டுகளில் ஜி20 நாடுகள் சீனா மீதான தங்களின் நிலைப்பாட்டை கடுமையாக்கி உள்ளன. எனவே ஜின்பிங்கிற்கு இது கடினமான கூட்டம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

**பிரதமர் மோடியின் முயற்சிக்கு பின்னடைவு?**

சர்வதேச தலைவருக்கான தனது நம்பகத்தன்மையை அதிகரித்து கொள்வதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜி20 மாநாட்டை பெரிதும் நம்பியிருந்தார்.

இத்தகைய சூழலில், ஜின்பிங் மாநாட்டுக்கு வருகை தராதது அவர் பிரதமர் மோடியை புறக்கணிப்பதாகவே பார்க்கப்படும் என்று தி நியூயார்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கும்,சீனாவுக்கும் இடையே கடந்த காலங்களில் பதற்றமான சூழல் நிலவி வந்தது. இந்நிலையில், இந்திய பகுதிகளை இணைத்து சீனா அண்மையில் வெளியிட்டுள்ள புதிய வரைப்படம், இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

சீனாவின் புதிய வரைப்படம் வெளியிடப்பட்டுள்ளது உண்மையில் அரசியல் பின்னணி கொண்டது என்று கூறுகிறார் சிங்கப்பூரின் எஸ்.ராஜரத்தினம் ஸ்கூல் ஆஃப் இன்டர்நேஷனஸ் ஸ்டடீஸை சேர்ந்த கொலின் கோ.

ஏனெனில், இந்த சீன அரசின் அதிகாரப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் வரைபடம் வெளியிடப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று அவர் கூறுகிறார்.

(16ம் பக்கம் பார்க்க)

# ஜி-20 மாநாட்டில் உக்ரைன் விவகாரம்:

(14ம் பக்கத் தொடர்ச்சி)

“உக்ரேனில் அமைதி திரும்ப வேண்டும் என்று தான் இந்தியா விரும்புகிறது. ஆனால் ஜி 20 மாநாட்டுக்கு வெளியே உள்ள இந்த பிரச்னையில் மேற்கத்திய நாடுகளின் நிலைப்பாடு வேறுபட்டிருக்கலாம். இதில் குளோபல் சவுத் என்றழைக்கப்படும் வளரும் நாடுகளுக்கு அவ்வளவு செல்வாக்கு இல்லை” என்றும் கூறுகிறார் நீலம் தேவ்.

ஜி 20 மாநாட்டில் யுக்ரேன் விவகாரம் எதிரொலிக்கும் என்று கூறப்படுவது, மோடியின் தலைமைக்கு ஒரு சோதனை என்று வெளியுறவுக் கொள்கை நிபுணர்கள் மற்றும் வெளியுறவுத் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

சர்வதேச சமூகத்தின் பல்வேறு முன்னுரிமைகளுக்கு இடையே சமநிலையை எவ்வாறு பராமரிக்கிறது என்பதை வைத்தே, இந்தியாவின் தலைமைப் பொறுப்பு தீர்மானிக்கப்படும் என்பதே நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

**ஜி 20 நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது ஏன்?**

உலக அளவில பெரும் பொருளாதாரத்தை கொண்டு 20 நாடுகளின் தலைவர்கள், 2008 இல் கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தனர்.

இந்த நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் இந்நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் வாஷிங்டனில் முதன்முறையாக சந்தித்து பேசினர்.

அப்போது நெருக்கடியில் இருந்த உலக பொருளாதாரத்தை மீட்டெடுக்க தங்களுக்குள் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதை ஜி 20 நாடுகளின் தலைவர்கள் உணர்ந்தனர்.

அதையடுத்து, பொருளாதார சிக்கல்கள் தீர்வு காணும் நோக்கில் 1997 -99 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஜி 20 நாடுகளுக்கான அமைப்பு, உச்சி மாநாடு நடத்தும் அளவுக்கு அடுத்த நிலையை அடைந்தது.

அதன் பின்னர், உலக அளவில் பெரிய பொருளாதார கூட்டமைப்பாக உருவெடுத்த இந்த அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் உச்சி மாநாடு நடத்தப்பட்டு வருகிறது.

இதில் உறுப்பு நாடுகளின் பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண்பது குறித்தும், உலகளாவிய பிரச்னைகள் தொடர்பாகவும் விவாதிக்கப்படுகிறது.

மொத்தம் 19 வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் ஜி 20 அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

உலகின் பெரும் பொருளாதார நாடுகள் மற்றும் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதார நாடுகள் இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ளன.

ஜி 20 உச்சி மாநாட்டை தலைமை ஏற்று நடத்துவதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஓர் உறுப்பு நாட்டுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த இந்தோனேசியாவுக்கும், இந்த ஆண்டு இந்தியாவுக்கும் மாநாட்டை நடத்துவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் அடுத்து பிரேசில், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் ஜி 20 மாநாட்டை நடத்த உள்ளன.

**வளரும் நாடுகளின் குரலாக இந்தியா இருக்குமா?**

உலக அளவில் வளரும் நாடுகளில் முக்கியமானவை பார்க்கப்படும் இந்தியா, சீனா, பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தோனேசியா போன்ற பிற நாடுகள், ஜி 20 கூட்டமைப்பில் வலுவான குரலைக் கொண்டுள்ளன. பொருளாதாரத்தில் வளரும் நாடுகளின் குரலாக இருக்க வேண்டும் என்ற லட்சியத்தை இந்தியா வளர்த்து வருகிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆற்றிய ஒரு உரையில், “ இந்த ஆண்டு ஜி 20 மாநாட்டை இந்தியா தலைமை ஏற்று நடத்த உள்ளது. இந்த வேளையில் உலகளாவிய வளரும் நாடுகளின் குரலை பெருக்குவதை நோக்கமாக நாம் கொண்டிருப்பது இயல்பானது.

எனவே வளரும் நாடுகள் பயனடையும் நோக்கில், உலகளாவிய அரசியல் மற்றும் நிதி நிர்வாகத்தை மறுவடிவமைக்க நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்” என்று மோடி பேசியிருந்தார்.

வளரும் நாடுகளை இந்தியா முன்னிறுத்துகிறது. ஜி 20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க யூனியனை சேர்ப்பது குறித்து டில்லி உச்சி மாநாட்டில் குரல் எழுப்பப்படும் என்ற மோடியின் வாக்குறுதியில் இருந்து இந்தியாவின் இந்த நிலைப்பாடு தெளிவாகத் தெரிகிறது. ●

# ஜி - 20 மாநாடு:

(15ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும், ஜி 20 மாநாட்டில் ஷி ஜின்பிங் இல்லாதது இந்திய பிரதமர் மோடிக்கு அதிர்ச்சியானதாக இல்லை. பல வழிகளில் அது அவருக்கு சாதகமாகவே இருக்கிறது என்றும் கொலின் கோ தெரிவித்துள்ளார்.

“ஜின்பிங் இந்தியாவின் வருகை உறுதி செய்யப்பட்டிருந்தால், எல்லைப் பிரச்னையை தீர்க்க தீவிர முயற்சி எடுக்காமல், இருநாட்டு உறவுகள் சீரடைந்ததாக கருதப்படும்” என்று கொள்கை ஆய்வு மையத்தின் பேராசிரியர் பிரம்மா செல்லனி கூறியுள்ளார்.

இந்திய - சீன எல்லையில் பதற்றம் நீடித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வரும் நிலையில், ஜி 20 மாநாட்டுக்கு ஷி ஜின்பிங்கை வரவேற்க பிரதமர் மோடி தீவிரமாக இருந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**மோடிக்கு அதிர்ச்சி?**

ஷி ஜின்பிங் இந்தியா வரவில்லை என்பது, ஜி20 மாநாட்டை நடத்தும் இந்தியாவின் பிரதமர் மோடிக்கு அதிர்ச்சிகரமான தகவல் தான் என்று ப்ளூாம்பெர்க் ஊடக நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டு நாடுகளுக்கு இடையே நிலவும் பதற்றத்தின் விளைவாக, ஜி20 மாநாட்டில் முதல்முறையாக இந்த முறை ஒருமித்த கருத்து எட்டப்படாமல் போகலாம் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஜி20 நாடுகளின் அனைத்து மாநாடுகளிலும் ஷி ஜின்பிங் பங்கேற்றுள்ளார். இத்தகைய பின்னணியில் தற்போது இந்தியாவில் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்கேற்கவில்லை.

அவரது இந்த முடிவு, கடந்த மாதம் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டுக்கு இடையே மோடியும், ஷி ஜின்பிங்கும் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தைக்கு நேர்மாறாக இருக்கும் என்றும் ப்ளூாம்பெர்க் கூறியுள்ளது.

அத்துடன் அமைதியை முன்னெடுத்து செல்லும் தலைவராக ஷி ஜின்பிங் தன்னை முன்னிலைப்படுத்தி கொள்ளவும் விரும்புகிறார் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கம்**

டில்லியில் நடைபெற உள்ள ஜி 20 மாநாட்டுக்கு சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புதின் வரவில்லை என்ற செய்திக்கு பிரிட்டனின் ஸ்கை நியூஸ் முக்கியத்துவம் அளித்துள்ளது.

ஜி 20 மாநாட்டில் மேற்கத்திய நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. ●




